699

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

# பால போதினி

## நான்காம் புத்தகம்



ஸ்ரீமதி லலிதாதேவி
எழுதியது

V. S. வெங்கடராமன் கம்பெனி
ஷர்ஸ் : : கும்பகோணம்

N35
97444

# பால போதினி

(படங்கள் அடங்கியவை)

துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்தது

பால பாடசாலைகளின் விரிவான பாடத்திட்டத்தின்படி

ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காக

ஸ்ரீமதி லலிதாதேவி எழுதியது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-ம் புத்தகம் | அணா | 2½ | 3-ம் புத்தகம் | அணா | 4 |
| 2-ம் | ,, | 3 | 4-ம் | ,, | 5 |

5-ம் புத்தகம் அணா 6

---

# பொது அறிவு

**By Mr. V. Natarajan, B.A., L.T.**

(சித்திரப் படங்கள் அடங்கியவை)

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் 2-வது, 3-வது வகுப்புகளுக்கு ... | அணா | 3 |
| இரண்டாம் புத்தகம் 4-வது வகுப்புக்கு ... | ,, | 5 |
| மூன்றும் புத்தகம் 5-வது வகுப்புக்கு ... | ,, | 6 |

---

பாபா எண்சுவடி வாய்பாடு அணா 1

---

# நூதன முறைக் கணிதம்

K. S. சுப்பிரமணிய ஐயர் இயற்றியது

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம் 1-வது, 2-வது வகுப்புகளுக்கு.... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் 3-வது வகுப்புக்கு .... | ,, | 5 |
| மூன்றும் புத்தகம் 4-வது வகுப்புக்கு ... | ,, | 6 |
| நான்காம் புத்தகம் 5-வது வகுப்புக்கு .... | ,, | 9 |

துரைத்தனத்தார் அங்கீகரித்தது
(16-11-'26 கெஜட்டின் 516-ம் பக்கம் பார்க்க)

# பால போதினி

## நான்காம் புத்தகம்



ஸ்ரீமதி லலிதாதேவி
எழுதியது

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 5

*Reprinted : July 1935*

# பாடத்திட்டம்

---

1. (i) தெய்வ வணக்கம்.
   (ii) தேசாபிமானப் பாடல்கள்.

2. (i) வியாசம் :—கதை எழுதல் (நோட்டுப் புத்தகத்தில்), கடிதம் எழுதல்; ரெவினியூ, தபால் முதலிய பாரங்களைப் பூர்த்தி செய்தல்; புராண சரித்திர மேதாவிகளின் சரிதைகள் எழுதல்.

   (ii) இலக்கணம் :—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்; திணை, பால், இடம், எண்; வினைகளின் காலம்; உபமான உபமேயம்.

3. செய்யுட் பாடம் :—விவேக சிந்தாமணி 10; குறள் 10; சித்தர் பாடல் 8; சமரசக் கீர்த்தனைகள் 2; இராம நாடகக் கீர்த்தனைகள் 2; நாட்டுப் பாடல் 1.

4. நாடகம் நடித்தல் :—உயர்ந்த வசன பாகங்கள் சில ஒப்பித்தல்.

# முகவுரை

தஞ்சை ஜில்லா கல்வி அதிகாரியாயிருந்த ஸ்ரீமான் C. D. சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் ஆதரவின்கீழ் கல்வித் துறையில் உழைப்பவர்களால் ஆரம்பப் பாடசாலைகளுக்காக பாடத்திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டது. அதற்கிணங்க, கதைப் புத்தகங்கள் பல பிரசுரமாகியிருக்கின்றன. ஆயினும், மேலும் மேலும் கல்வி அபிவிருத்தியாக வேண்டிய இந்நாட்களில், பிள்ளைகளுக்குத் தேவையான பல புத்தகங்கள் ஏராளமாக இயற்றப்பட்டு எளிதில் அவர்களுடைய உபயோகத்திற்குக் கிடைக்கும்படி செய்வதே நமது முக்கிய கடமையாகும்.

ஆகையின் "பால போதினி" புத்தகங்கள் புதுமாதிரியாக எழுதப்பட்டுள்ளன. இவைகளில் ஒவ்வொரு வகுப்புக்கு உரிய பாடத்திட்டமும் காட்டப்பட்டு, அதையொட்டிக் கதைகள் சொல்லும் வகையிலேயே பிள்ளைகள் உற்சாகத்தோடு தமிழறிவையும், பொது அறிவையும் அடையத் தக்கவாறு கதைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கு ஏற்றவாறு பலவிதச் சித்திரப்படங்களும், நடித்துக் காட்டுதற்குரிய நாடகங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அன்றியும், பொது அறிவுப் பாடத்திட்டம் ஒன்றும் குறிப்பித்துள்ளது.

இப்பாடத்திட்டத்தைத் தயார் செய்வதில் உதவினராகிய ஸ்ரீமான் V. நடராஜ ஐயர் அவர்கள், முதன் முதல் இவைகள் அச்சிடப்படுவதற்கு முன், இவைகளை எழுத்துப் பிரதியிலேயே பார்வையிட்டு ஆங்காங்கு திருத்திக் கொடுத்து எங்களுக்கு உதவியதற்காக, நாங்கள் மிகவும் நன்றி பாராட்டுகிறோம்.

V. S. வேங்கடராமன் கம்பெனி

# அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | தோத்திரப் பாடல்கள் | ... | 5 |
| 2. | தேசாபிமானப் பாடல்கள் | ... | 9 |
| 3. | அப்பர் | ... | 11 |
| 4. | திருமலை நாயகர் | ... | 15 |
| 5. | திருவள்ளுவர் | ... | 17 |
| 6. | கிளைவ் | ... | 19 |
| 7. | புத்தர் | ... | 23 |
| 8. | ஸ்ரீ ஆண்டாள் | ... | 26 |
| 9. | கோகலே | ... | 29 |
| 10. | விஜயராகவ நாயகர் | ... | 31 |
| 11. | அசோகர் | ... | 35 |
| 12. | குமணர் | ... | 38 |
| 13. | கம்பர் | ... | 45 |
| 14. | இராணி மங்கம்மாள் | ... | 48 |
| 15. | சிவாஜி | ... | 49 |
| 16. | முத்துசாமி ஐயர் | ... | 54 |
| 17. | பீஷ்மர் | ... | 57 |
| 18. | இராஜராஜச் சோழர் | ... | 58 |
| 19. | பிரதாபசிங் | ... | 64 |
| 20. | நான் ஒன்றும் செய்யவில்லையே | ... | 68 |
| 21. | செய்யுட்பாடம் | | |
| | (1) விவேக சிந்தாமணி | ... | 70 |
| | (1) திருக்குறள் | ... | 71 |
| | (3) சித்தர் பாடல்கள் | ... | 72 |
| | (4) சமரசக் கீர்த்தனைகள் | ... | 73 |
| | (5) இராம நாடகக் கீர்த்தனைகள் | ... | 75 |
| | (6) நாட்டுப் பாடல் (கோவலன்) | ... | 77 |
| 22. | வசன பாகங்கள் (ஒப்புவிப்பதற்கானவை) | ... | 78 |

# பாலபோதினி

## நான்காம் புத்தகம்

# 1. தோத்திரப் பாடல்கள்



### விநாயகர்

1. சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சித்தி யாகிய சொற்பொருள் நல்குவ
* சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

2. வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி † நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

---

*சித்தி விநாயகர் என்பது மதுரை ஸ்தல விநாயகரது பெயர்.
† நால்வாய் - தொங்கும் வாய்.



## சரஸ்வதி

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேம்பட்ட மன்ன ருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண் டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலா வல்லியே!

## சுப்பிரமணியர்

4. சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறையில் தியானம்வைக்க—அறியாத
சடகசட மூடமட்டிப் பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்கம்—உறவேனோ?
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையிவ் வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற—குமரேசா!
கடகபுய மீதுரத்ன மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்பம்—அணிவோனே!
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ போகமிக்க—பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
(உ) தவிபுரிய வேணும்நெய்த்த—வடிவேலா!

* அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த—மயில்வீரா !
அதிசய மநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக ! †திரு வேரகத்தின்—முருகோனே !

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையே றியோர்தூ வெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூ சிஎன்உள் ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய ‡ பிரமா புரமே வியபெம் மானிவ னன்றே.

6. அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றை
கனகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் || பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

## திருவாய்மொழி

7. குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரச் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்

---

* அருணம்—சிவப்பு. † திருவேரகம்—சுவாமிமலை.
‡ பிரமாபுரம்—சீர்காழி. || பெரும்பற்றப்புலியூர்—சிதம்பரம்.

நலந்தரும் சொல்லே நான்கண்டு கொண்டேன் ;
நாராயணு வென்னும் நாமம்.

## மஸ்தான் சாயபு பாடல்

ஆதியா யனுதி யாகி அரும்பொருள் அனைத்து மாகிச்
சோதியாய்ச் சொரூப ஞானச் சுடரொளித் தீப மாகி
நீதியாய்த் திறமை யாகி நித்தியா னந்த மாகி
* மாதிரப் புயமு மான மகமதே ! வருகு வீரே.

## திருவருட்பா

9. ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும் ;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும் ;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும் ; பொய்மை
பேசா திருக்க வேண்டும் ;
பெருநெறி பிடித்தொழுக வேண்டு(ம்) ; மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும் ;
மருவுபெண் ணுசையை மறக்கவே வேண்டும் ; உனை
மறவா திருக்க வேண்டும் ;
மதிவேண்டும் ; நின்கருணை நிதிவேண்டும் ; நோயற்ற
வாழ்வினுன் வாழ வேண்டும் ;
தருமமிகு சென்னையிற் கந்த † கோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே !
தண்முகத் துய்யமணி ‡ உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே !

---

* மாதிரம்—திசை. † கோட்டம்—கோயில்.

‡ உண்முகம்—உண்மை மார்க்கம்.

# 2. தேசாபிமானப் பாடல்கள்

"காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே" என்ற மெட்டு

1. பொங்கும் மங்களம் தங்கும் பாரத
பூமிக்குத் திலகமாம்
எங்கள் செந்தமிழ் நாடென யாங்கள்
இறுமாப் புறுகின்றோம்;
திங்கள் சூடிய சிவன்அரி முருகன்
திருவுள மகிழ்பதிகள்
நங்கள் துன்பமெ லாந்தொலைத் திடுமோர்
நன்மையைப் பெற்றோமே.

2. தேவரும் வேதமும் தேடிக் காணாத்
திவ்விய நற்பொருளை
யாவரும் கண்டுக ளித்திடு மாறுதம்
அன்புவ ழிந்தொழுகும்
பாவதை ஆயிரம் ஆயிர மாகப்
பாங்குடன் அருள்செய்த
* மூவரும் ஆறிரு மூதறிஞ ருமிங்கு
முற்படத் தோன்றினரே.

3. சொல்லமர் நீதிக் கடலெனும் ஆத்தி
சூடியே முதலான
நல்லன நூல்பல செய்தெமக் குதவிய
ஞானமூ தாட்டியரும்

---

* மூவர்—சைவ சமயாசாரியர் மூவர்; ஆறிருவர்—12 வைணவ ஆழ்வார்கள்.

எல்லவ ரும்பணி ராமன் கதையை
இனிய அமுதாகச்
சொல்லிய கம்ப நாடரும் தோன்றிய
தூய இடமிதுவே.

4. உண்மையி லுயர்ந்த அரிச்சந் திரனும்
உறுதுயர் தமைப்பொறுத்த
திண்மையார் நீதி நளனும் தருமனும்
செங்கோல் தசரதனும்
வண்மையா லுயர்ந்த கர்ணனும் பாரியும்
வான்புகழ் அதிகனுமென்(று)
எண்ணுமிப் பெரியோ ரனைவரும் பிறந்த
*எழி லுறு நாடிதுவே.

5. சந்திர குப்தர் அசோகர் அக்பர்
சாலவே புகழ்படைத்த
தந்திர சிவாஜி திருமலை நாய்க்கர்
சாஸ்திரக் கடல்குடித்த
† எந்தையப் பையதீக்ஷிதர் தேசிகர்
எனுமிப் பேரறிஞர்
வந்தவ தரித்தஇவ் வளர்புகழ் நாட்டின்
மாண்பினைச் சொலவெளிதோ ?

---

* எழில்—அழகு. † எந்தை—எம் தந்தை.

# 3. அப்பர்

அறுபத்துமூன்று சிவனடியார்களில் அப்பர், சுந்தரர், சம்பந்தர் என மூவர் மிகவும் சிறப்புற்றவர்கள். இவர்களைப் பற்றிய விவரத்தைப் பெரிய புராணத்தில் நீங்கள் காணலாம்.

இவர்களில் ஒருவரான அப்பர்* சுவாமிகள் திருவாமூர் என்ற ஊரில் வசித்திருந்தார். பெற்றோர் அவருக்கு இட்டபெயர் மருள்நீக்கியார். அவருக்குத் திலகவதியார் என்ற ஒரு தமக்கை இருந்தார். அவர்கள் இளமையிலேயே பெற்றோர்களை இழந்தனர். திலகவதியார், தமக்காக நிச்சயிக்கப் பட்டிருந்த புருஷன் இறந்துவிட்டார் என்பதைக் கேள்வியுற்றதும், தாமும் இறந்துவிட எண்ணினர். ஆனல் மருள் நீக்கியார், "அக்கா! என்னைவிட்டுத் தாங்களும் இறந்துபோனல் நான் தனியே என்ன செய்வேன்" என்று வருந்தினர். திலகவதியார் தம் தம்பியினிடம் அன்பும் இரக்கமும் கொண்டு அவர் பொருட்டு உயிர் வாழ்ந்திருந்தனர்.



மருள்நீக்கியார் பலவகைச் சாஸ்திரங்களையும் படித்து, பெரிய வித்துவான் எனப் பிரசித்திபெற்றனர். பின்பு அவர் சமண மதத்திற் சேர்ந்து, சமணர்களுக்குக்

* அப்பர் சரித்திரத்தை ஸ்ரீமதி லலிதாதேவி எழுதிய "பக்த வசனம்" என்னும் புத்தகத்தில் விவரமாகப் படிக்கலாம்.

தலைவராகி, அவர்களால் உபசரிக்கப்பட்டார். சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்ற பெயர் கொடுத்தனர்.

திலகவதியாரோ, சிவபக்தி மிகுந்தவர். தம் தம்பி சைவமதத்தை விட்டுச் சமண மதத்தைத் தழுவியதுபற்றி மிகவும் வருந்திச் சிவபெருமானை வேண்டினர். இவ்விதம் வருந்துவதைக்கண்ட பகவான் திலகவதியாருக்கு ஒரு நாள் கனவில் தோன்றி, "உன் தம்பிக்கு வயிற்றுவலி உண்டாகும். அவன் அதனல் வருந்தியபின் திருந்தி சிவபக்தன் ஆவான்" என்று தெரிவித்தார். சில நாட்களுக்குப் பிறகு தருமசேனருக்கு வயிற்றுவலி உண்டாயிற்று. அதனல் அவர் மிகவும் வருந்தினர். சமணர்கள் கொடுத்த மருந்தும், செய்த மந்திர பூசைகளும் பயன்தரவில்லை. கடைசியாகத் தருமசேனர் தம் தமக்கையாரிடம் வந்து அழுதார். தம் தம்பியின் நிலைமையைக்கண்டு பரிதபித்து, திலகவதியார் அவருடம் பின்மீது திருநீறு பூசினர். அவரை அழைத்துக்கொண்டு சிவாலயம் சென்றனர். அங்கே பகவான் சந்நிதியில் இருவரும் வணங்கித் துதித்தார்கள்; மருள்நீக்கியார் பல பாடல்களைப் பாடினர். உடனே பகவான் அருளால் வயிற்றுவலி நீங்கியது. அன்று முதல் மருள்நீக்கியார் உண்மையான சிவபக்தராயினர். அவர் பாடல்கள் வெகு அன்பும் இனிமையும் மிகுந்தவை யாதலின், அவருக்குத் திருநாவுக்கரசு (வாக் ஈசர்) என்னும் பெயர் வழங்கலாயிற்று.

அவரிடம் பொறாமை கொண்ட சமணர்கள், இவ் விஷயத்தைத் தங்கள் அரசனிடம் தெரிவிக்க, அவனும் கோபம் அடைந்தான். உடனே, அவன் கட்டளைப்படி சமணர்கள் அவரைத் தருவித்து, மறுபடியும் தம் மதத்தில் சேரும்படி பலவிதத்திலும் வருத்தினர்கள். சிவபெருமானிடம் ஆழ்ந்த அன்பு கொண்ட அவருக்கு அவர்களால்

ஒரு வகையிலும் தீங்குசெய்ய முடியவில்லே. கடைசியாக அவர்கள் அவரை ஒரு பெருங் கல் தூணுடன் சேர்த்துக் கட்டிக்கொண்டுபோய் நடுக்கடலில் தள்ளினார்கள். நாவுக்கரசரோ, "நற்றுணையாவது நமச்சிவாயவே" என பகவானைத் துதித்து இருந்தனர். அத்தூணே தெப்பமாக அவரைத் தாங்கி மிதந்து செல்ல, அவர் மெதுவாய்க் கரை சேர்ந்தார். பிறகு திருப்பாதிரிப் புலியூர் ஆலயத்தில் சிவபெருமானைத் தரிசித்துப் பல பாடல்கள் பாடினர். இந்த ஆச்சரிய சம்பவம் தேசமெங்கும் பரவியது. இதை அறிந்த அத்தேச அரசனாகிய பல்லவராஜன் அவரை உபசரித்தான்.



நாவுக்கரசர் சிவஸ்தலங்கள் தோறும் சென்று சிவபிரானைத் தரிசித்து, ஆங்காங்கு பாடல்கள் பாடி மகிழ்ந்தார். உங்கள் தோத்திரப்பாடல்களில் "அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை" என்று தொடங்கும் பாடல் அப்பர் பாடியதாகும்.

ஞானசம்பந்தர் எப்பொழுதும் இவரை "அப்பரே" என அழைத்தமையால், இவருக்கு அப்பர் எனப் பெயர் ஏற்பட்டது. அப்பரும் சம்பந்தரும் வேதாரணியம் சென்றனர். அங்கு கோவில் கதவு வெகு நாளாகத் திறக்கக்கூடாமல் மூடப்பட்டிருந்தது. நாவுக்கரசர் இன்பமாகப் பாடவே, பகவான் அருளால் கதவு தானே திறந்துகொண்டது. இருவரும் தரிசித்தபின், மூடிக்கொள்ளும்படி சம்பந்தர் ஒரு பாடல் பாடியதும் கதவு மூடிக்கொண்டது.

கைலாசத்தில் சிவபெருமானைத் தரிசிக்கவேண்டுமென்று அப்பருக்கு அதிக ஆசை இருந்தது. அதற்காக வடக்கே சென்று கங்கையையும் தாண்டி, வெகுதூரம் பிரயாணம் செய்தார். பிரயாணத்தால் தேகம் மெலிந்து, பலம் குறைந்து நடக்கமுடியாமல் தவழ்ந்தார். அப்போதும் சந்தோஷமாகவே ஒரே மன உறுதியாகச் சென்றார். இதைக் கண்ட பகவான் அப்பருக்குப் பிரசன்னமாகி அங்குள்ள தடாகத்தில் மூழ்கச் செய்தார். மூழ்கிய அப்பர் திருவையாற்றில் காவேரியினின்றும் எழுந்தார். எழுந்து பார்க்கையில், அங்கு உமாதேவியுடன் கைலாசநாதர் இருப்பதைக் கண்டு ஆனந்தமடைந்து பாடல்கள் பாடித் துதித்தார். அப்பர் சில நாட்கள் சிவஸ்தலயாத்திரை செய்து பல பாடல்கள் பாடியபின் இவ்வுலகத்தைவிட்டு நீங்கினார்.

திருவையாற்றைப் பூலோக கைலாசம் என்று இப்போதும் சொல்வதுண்டு. அப்பருக்குத் தரிசனம் அளித்த திருவிழா அங்கு வருஷந்தோறும் நடக்கிறது. திருவையாற்றில் அப்பர் கைலாசநாதரைத் தரிசித்தபோது பாடிய பாடலை மனப்பாடம் செய்.

அவர் வயிற்றுவலியால் கஷ்டப்பட்டபோது தம் தமக்கையாருக்கு எழுதியதுபோல ஒரு கடிதம் எழுது.

# 4. திருமலை நாயகர்

படத்தில் காண்பது மதுரைப் பட்டணத்தில் உள்ள ஓர் அழகிய மாளிகை ஆகும். இதன் பெயர் திருமலைநாயக்மஹால். மதுரையில் இராஜாவாயிருந்த திருமலைநாயகரால் இப்பெரிய அரண்மனை கட்டப்பட்டது. அவர் சுமார் 350 வருஷங்களுக்கு முன் வாழ்ந்திருந்தார்.



மதுரையில் பாண்டிய இராஜாக்களும், தஞ்சாவூரில் சோழ இராஜாக்களும் வெகு காலமாக அரசாட்சி செய்து வந்தார்கள். ஆனால் அவர்கள் பலம் வரவரக் குறையலாயிற்று. அப்போது விஜயநகரச் சக்கரவர்த்தி பெரிய சேனையை அனுப்பித் தஞ்சாவூர், மதுரை இரண்டையும் ஜயித்தார். அதுமுதல் இரண்டு ஊர்களிலும் நாயக வம்சத்தினர் அரசாளத் தொடங்கினர். தஞ்சை நாயக அரசர்களும் மதுரை நாயக அரசர்களும் உறவினர்கள்; ஆயினும் அவர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் சண்டையிட்டு வந்தனர்.

மதுரை நாயக இராஜாக்களில் மிகவும் கீர்த்தி பெற்ற வர் திருமலை நாயகர். விஜயநகரத்துச் சக்கரவர்த்திக்கு வழக்கமாக அனுப்பும் கப்பப்பணத்தை, அவர் அனுப்ப மறுத்து விட்டார். ஆகையால் சக்கரவர்த்தியின் உத்தரவுப்படி மைசூரிலிருந்து ஒரு பெருஞ்சேனை வந்து மதுரையைத் தாக்கியது. மதுரைச் சேனாதிபதியாகிய இராமப்பையர், கடும்போர் புரிந்து, மைசூர்ச் சேனையைச் சின்ன பின்னமாக்கித் துரத்திவிட்டார். பிறகு மதுரைச் சேனை பலம் மிகுந்து பக்கத்து இராஜ்ஜியங்களைத் தாக்கித் திருவாங்கூர், இராமனாதபுரம், தஞ்சாவூர் முதலியவற்றைப் பிடித்தது. இவ்விதம் நாயக ராஜ்ஜியம் பெருகியது.

திருமலை நாயகர் தம் தலைநகராகிய மதுரையை அழகுடையதாக்க விரும்பினார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலைச் சீர்படுத்திப் புதுப்பித்துக் கட்டினார். அழகிய புதுமண்டபம் கட்டி, அதில் உள்ள கற்றூண்களில் பல திவ்விய உருவங்களை வெட்டுவித்தார். ஓரிடத்தில் திருமலை நாயகரும் அவர் மனைவியும் சுவாமி தரிசனம் செய்து நிற்பது போல உருவச் சிலை வெட்டப்பட்டுள்ளது. அவர் கட்டிய அரண்மனை இன்றைக்கும் பார்ப்போர் பிரமித்து நிற்கும்படி வெகு உன்னதமான மாளிகையாய் விளங்குகிறது.

மதுரைக் கருகே யுள்ள அழகர் கோவிலும், திருப்பரங்குன்றத்துக் கோவிலும், ஸ்ரீரங்கம் பெரிய கோவிலின் சில பாகங்களும், திருமலை நாயகரால் கட்டப்பட்டவை. பல நூற்றாண்டுகளாயினும் இவை இன்னும் அழியா அழகுடன் இருக்கின்றன. இந்தக் கட்டடங்களினால், பழைய இராஜாக்களின் செல்வத்தையும் பிரதாபத்தையும் பற்றி நாம் அறிந்துகொள்ளலாம்.

திருமலை நாயகர் அழகிய கட்டடங்கள் கட்டியதோடு, தம் சமஸ்தானத்தில் வித்வான்களையும் கவிஞர்களையும் ஆத ரித்தார். அவர் காலத்தில் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும், குமரகுருபர சுவாமிகளும் வாழ்ந்தார்கள். குடிகளுக்கு உப யோகமாக, நாயகர் பல வாய்க்கால்கள் வெட்டுவித்தார். சகல ஜனங்களும் சந்தோஷிக்கும்படி 36 வருஷம் தர்ம நியா யத்துடன் நாயகர் இராஜ்ஜிய பரிபாலனம் புரிந்து, தமது எழுபத்தைந்தாவது வயதில் பரமபதத்தை யடைந்தார்.

---

# 5. திருவள்ளுவர்

நம் தமிழ் நூல்களில் திருக்குறள் முதன்மையானது. இதில் இரண்டு அடிகளாலான பாடல்கள் 1330 உள. ஆயி னும், பிரதிபாட்டின் அர்த்தத்தையும் வெகு விரிவாய்ச் சொல்லலாம். உனது பாடங்களில் மனப்பாடம் பண்ணுவ தற்காகச் சில குறட்பாக்கள் உண்டு. ஒவ்வொரு பாட்டிலும சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தைப்பற்றி, நீ ஒரு சிறு வியாசம் எழுதலாம்.

இப்பாடல்களைத் திருவள்ளுவர் இயற்றினர். அவர் மயிலாப்பூரில் பிறந்தவர். அவரது தாய் தந்தையர்கள் ஆதியும் பகவனு மாவர். திருக்குறளின் முதல் பாட்டில் "ஆதிபகவன்" என்பது, பெற்றோர் வணக்கம், கடவுள் வணக்கம் ஆக இருபொருள் உண்டாகும்படி உள்ளதைக் கவனி. வள்ளுவர் பிறந்தவுடன், ஆதியும் பகவனும் குழந் தையை விட்டுவிட்டுப் போயினர். அக்குழந்தையை ஒரு வேளாளன் கண்டு எடுத்து வளர்த்து வந்தான். அவருக்கு வேளாளன் இட்ட பெயர் 'வள்ளுவர்' என்பதாம்.

தம் சிறுவயதில் அவர் காட்டிலுள்ள சித்தர், முனிவர்களிடம் சென்று கல்விகற்றுத் தேர்ச்சி அடைந்தார். பிறகு காவேரிப்பாக்கத்து வாசுகி என்னும் அழகிய பெண்ணை மணந்து வாழ்ந்தனர். அவர்கள் இருவரும் மனமொத்து இன்பமாக ஜீவித்தனர். அவ்விரு தம்பதிகளைப்பற்றிப் பல கதைகள் சொல்வதுண்டு. உலகத்தார் இல்லறம் நன்றாய் நடத்துவதற்கு இவர்கள் கதையை உதாரணமாகக் கொள்கிறார்கள்.

திருவள்ளுவர் ஆடை நெய்து ஜீவனம் செய்து வந்தார். எவருக்கும், எவ்வித ஆபத்து நேரிடினும், அவர் முன்னின்று உதவி புரிந்தனர். அவர் சகல ஜனங்களிடத்திலும் அன்பும் பிராணிகளிடத்தில் இரக்கமும் உள்ளவர்.

அக்காலத்தில் மதுரையில் வித்வான்கள் கூடும்படியான, ஒரு தமிழ்ச் சங்கம் ஏற்பட்டிருந்தது. புதியனவாய் இயற்றப்பட்ட நூல்களை அச்சங்கத்து வித்வான்கள் அரசன் முன்னிலையில் பரிசோதித்து, உலகத்தார்களுக்கு உபயோகமா யிருப்பதை உண்மை நூல் என ஒப்பினார்கள். இப்படி அரங்கேறிய நூலுக்கு சங்கப்பலகையும் இடம் கொடுத்தது. அதனால் அதற்குச் சங்கநூல் எனப் பெயர் வழங்கும். இவ்விதமாகவே வள்ளுவர் தம் நூலைச் சங்கத்தில் அரங்கேற்ற எடுத்துச் சென்றார். அங்கே பண்டிதர்கள் பரிசோதித்து, இந்நூலின் நுட்பப் பதங்களில் விரிவான அர்த்தம் இருக்கக் கண்டார்கள். ஆகையால் குறளும் அரங்கேறியது.

அப்பண்டிதர்கள், இந்த அருமையான நூலுக்குத் ‘ திருக்குறள் ’ என்று பெயரிட்டு, வள்ளுவர் பெருமையை விளக்கப் பல கவிகள் பாடினார்கள். அக்கவிகள் அடங்கிய நூலே “ வள்ளுவமாலை ” யாம்.

# 6. கிளைவ்

திருச்சிராப்பள்ளி மலைக் கோவிலைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அந்தக் கோவில் உயர்ந்த கற்பாறையின் மீது அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. மலையடிவாரத்தில் உள்ள ஒரு பெரிய கட்டடத்திற்குக் கிளைவ் வீடு என்று பெயர். இந்த வீட்டில் சுமார் 200 வருஷங்களுக்கு முன் கிளைவ் வசித்திருந்தார்.

இப்பொழுது நமது தேசம் முழுவதையும் அரசாளும் ஆங்கிலேயர் அக்காலத்தில் சாதாரண வியாபாரிகள். அவர்கள் தேசம் இங்கிலாந்து. அது அநேக ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளது.



அவர்கள் வியாபாரம் செய்வதற்காக நமது தேசத்திற்கு வந்தார்கள். இப்படியே பிரான்சு தேசத்திலிருந்து பிரெஞ்சுக்காரர்களும் வந்தார்கள். அவர்கள் புதுச்சேரி, காரைக்கால் முதலிய துறைமுகப் பட்டணங்களில் குடியிருந்தார்கள். சென்னப்பட்டணத்தில் ஆங்கிலேயர் குடியிருந்தார்கள். தங்கள் வியாபாரம் விருத்தியாகும் பொருட்டு பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் போட்டி ஏற்பட்டு, அடிக்கடி சண்டைகள் நடந்தன. இவ்விதம் பல சண்டைகள் நடந்து கடைசியில் பிரெஞ்சுக்காரர் தலையெடுக்க முடியாதபடி ஆங்கிலேயர் பலம் அடைந்தார்கள். நாளடைவில் இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்

ஆட்சிக்குட்பட்டது. ஆங்கிலேயர் பலம் மிகுந்து வந்ததற்குக் கிளைவ்தாம் முக்கிய காரணர்.

வெகு தூரத்திலிருந்து இந்தியாவிற்கு வியாபாரம் செய்ய வந்த ஐரோப்பியர்கள், எவ்வளவு சாமர்த்தியமும் தைரியமும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்து சேர, நாலைந்து மாதம் கப்பற் பிரயாணம் செய்யவேண்டும். இவ்விதம் பிரயாணம் செய்து அந்நிய தேசத்தில் கஷ்டப்படும்படியாகத் தம் பிள்ளைகளைப் பெற்றோர்கள் விடுவார்களா? ஆனால் சிறு பிள்ளையான கிளைவ் துஷ்டத்தனமும், குறும்பும் அதிகம் உள்ளவர். இவருக்குக் கல்வி கற்பிக்க முடியாது என்று பள்ளிக்கூட உபாத்தியாயர் கைவிட்டார். இவரது துஷ்டச்செயல்கள் பெற்றோர்களாலும் பொறுக்க முடியவில்லை. கடைசியில் எப்படியாவது ஒழியட்டும் என்று கிளைவை இந்தியாவிற்கு அனுப்பினார்கள்.

அப்படி வந்து சேர்ந்த கிளைவ் கொஞ்சகாலம் சென்னப்பட்டணத்தில் வியாபாரக்கணக்கு எழுதிக்கொண்டு இருந்தார். பரம துஷ்டராயிருந்த அவருக்கு இவ்விதம் காலம் கழிப்பதில் கொஞ்சமும் விருப்பமில்லை. ஆட்களைச் சேகரித்துச் சேனையைத் தயார் செய்துகொண்டு ஊர்களைத் தாக்கி இந்திய ராஜாக்களை ஜயித்துத் தாம் பெருங்கீர்த்தி பெற வேண்டுமென்று அவர் வெகு ஆசைகொண்டார். "எனது பெற்றோர்கள் மகிழும்படி ஏராளமான செல்வம் சம்பாதிக்க வேண்டும்; எனது தாய்நாட்டின் வியாபாரம் விருத்தியாக வேண்டும்; என் நாட்டார்களின் பலமும் பெருமையும் என்றும் அழியாமல் இருக்கும்படி செய்யவேண்டும்" என்று

நிச்சயம் செய்துகொண்டார். அவ்வாறே சந்தர்ப்பம் நேரிட்டதும், அவர் ஊக்கத்துடன் வெகு பாடுபட்டு ஜயம் பெற்றார்.

பிள்ளைகளே! உங்களில் சிலர் "நம் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் வருந்தும்படி, நாமும் கிளைவ்போல துஷ்டத்தனம் செய்கிறோம். ஆகையால் அவர்போல நாமும் பெரும்புகழ் பெற்று இருப்போம்" என்று எண்ணலாம். ஆனால் அவர்போலத் தைரியமாய், நமது தாய் நாட்டின் பலமும் நற்பெயரும் விருத்தியாக வேண்டும் என்ற ஊக்கத்துடன் உழைப்பதுதான் நன்மை தரும்.

கர்நாடகத்தில் ஏற்பட்ட கலகத்தினால் கிளைவுக்கு வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாஹிப் என்பவரைக் கர்நாடக நவாப் ஆக்க உதவி செய்தார்கள். பழைய நவாபின் பிள்ளையாகிய மகமது அலி திருச்சிராப்பள்ளிக்கு ஓடிப்போய் ஒளிந்துகொண்டார். உடனே பிரெஞ்சுக்காரர் சந்தாசாஹிபின் சேனையுடன் கூடித் திருச்சிராப்பள்ளியைச் சூழ்ந்து கொண்டனர். இதனால் ஆங்கிலேயருக்குப் பெரும் பயம் உண்டாயிற்று. பிரெஞ்சுக்காரர் பலத்தைக் குறைக்க மகமது அலிக்கு எப்படியாவது உதவி செய்யவேண்டும் என்று எண்ணினார்கள்.

இச்சமயம், கிளைவின் யோசனை பலித்தது. அவர் ஒரு சைனியத்தைத் திரட்டிக்கொண்டு திடீரென்று சென்று ஆர்க்காட்டைப் பிடித்தார். இந்தச் சமாசாரத்தைக் கேட்ட சந்தாசாஹிப், உடனே கிளைவைத் துரத்த, திருச்சிராப்பள்ளியிலிருந்த தம் சேனையை ஆர்காட்டுக்கு அனுப்பினார். ஆனால் கிளைவ் வெகு சாமர்த்தியமாகச் சந்தாசாஹிப்பின் சேனையைத் தோற்கடித்துத் துரத்தினார். பின்பு, நேரே

திருச்சிராப்பள்ளிக்கு வந்து மகமது அலியை விடுவித்தார். பிரெஞ்சுக்காரர் முற்றிலும் தோல்வி அடைந்தனர். இங்கிலீஷ்காரர் உதவியினுல் மகமது அலி நவாப் ஆக முடிசூட்டப் பெற்ருர். தமக்கு உதவி செய்த கிளைவுக்கும் ஆங்கிலேயருக்கும், மகமது அலி ஏராளமான திரவியம் கொடுத்தார். அவர்கள் வியாபாரத்துக்கு வேண்டிய பல சௌகரியங்களும் செய்துகொடுத்தார்.



சில வருஷங்களுக்குப் பின், கிளைவ் வங்காளத்தில் நவாப் ஆக இருந்த சுராஜ் உட் டௌலாவைத் தோற்கடிக்கத் தந்திர யுத்தம் செய்தார். அந்தச் சண்டையில் நவாப் இறந்து போனுர். உடனே கிளைவ், மீர் ஜாபர் என்பவரை நவாப் ஆக்கி முடி சூட்டினுர் மீர் ஜாபரும் மிகவும் நன்றி உள்ளவராய்க் கிளைவுக்குப் பல கோடி ரூபாய்களும், நகைகளும் கொடுத்தார். கல்கத்தா பட்டணத்தைச் சுற்றி நிலபலங்களும் அளித்தார். இங்கிலீஷ்காரர் இலவசமாகத் தமது தேசத்தில் வியாபாரம் செய்யுமாறு சகல சுதந்திரத்தையும் அளித்தார். சாதாரண வியாபாரிகளாயிருந்த இங்கிலீஷ்காரர்கள், கிளைவ் செய்த அரிய செயல்களினுல், இந்திய ராஜாக்களுக்குச் சரிசமமான நிலைமையில் உயர்ந்து விளங்கினுர்கள். ஆகவே இந்தியாவில் ஆங்கில இராஜ்யாதிகாரம் ஏற்பட்டதற்குக் கிளைவ் முக்கிய காரணராயிருந்தார்.

இவ்வளவு தீரமான செய்கைகளை முடித்துக்கிளைவ் இங்கிலாந்து சென்ருர். எல்லோரும் அவரைப் புகழ்ந்தார்கள்.

அங்கே அவர் பெரிய சீமானாக வசித்தார். தாம் வாழ ஒரு சிறந்த அரண்மனை கட்டிக்கொண்டார். தம்பந்து ஜனங்களுக்குத் தாராளமாக இனும் அளித்தார். இங்கிலாந்து அரசர் அவருக்குப் பிரபு (லார்டு) என்ற பட்டம் அளித்துக் கௌரவித்தார். 1774-ஆம் வருஷம் கிளைவ் இறந்து போயினர்.

கிளைவ் இங்கிலாந்து வீரர்களில் ஒருவர். இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகள் அவர் கதையைப் படிக்கும் போதெல்லாம், "இவ்வளவு தீரச் செயல்கள் செய்து, நமது தேசத்தின் செல்வத்தை விருத்தி செய்தவர் புகழ் என்ன ! இப்போது பிரிட்டிஷ் இராஜ்யம் என்று நாம் பெருமையாகச் சொல்லிக் கொள்வதற்குக் கிளைவ்தாம் மூல காரணம். அவர் கட்டி வைத்துப் பிறகு வளர்ந்து வந்த இந்த பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தைப் பெற்ற நமது தேசத்தின் பாக்கியம் என்ன!" என்று எண்ணி எண்ணி ஆனந்தம் அடைகிறார்கள்.

---

# 7. புத்தர்

சுமார் 2500 வருஷங்களுக்கு முன் இமயமலைக்கருகே ஒரு அரசர் இருந்தார். அவருக்குச் சித்தார்த்தன் என்ற ஒரு குமாரன் இருந்தான். அவ்வரசகுமாரன் சகலவித சுகங்களுடனும் அரண்மனையில் வசித்திருந்தான். ஜனங்கள் சாதாரணமாக அனுபவிக்கும் சுக துக்கங்களைப்பற்றி ஒன்றும் அவனுக்குத் தெரியாது. ஒருநாள் அவன் பட்டணத்தைச் சுற்றி உலாவச் சென்றான். அப்போது வயது மிகுந்த ஒரு தள்ளாத கிழவனையும், கஷ்டப்படும் ஒரு நோயாளியையும், மரண அவஸ்தைப்படுபவன் ஒருவனையும்,

ஒரு சந்நியாசியையும் பார்த்தான். இவ்விதம் ஜனங்கள் வருந்துவது கண்டு, சித்தார்த்தனது மனம் சகிக்கவில்லை. இவ்விதமாகவே உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கவேண்டும் என்பதைப் பின்பு தெரிந்து கொண்டான். சகலருக்கும் ஏற்படும் இத்துன்பங்களை நீக்குவது எவ்வாறு என்று ஆலோசித்தனன். தினமும் இவ்விதம் ஆலோசித்துப் பெருங் கவலை கொண்டான். ஒருநாள் இரவில் தன் மனைவியையும் குழந்தையையும் விட்டுக் காட்டிற்குச் சென்றான்.



சித்தார்த்தன் ஆறு வருஷகாலம் ஒரு மரத்தடியில் சிந்தனை செய்து கொண்டிருந்து, கடைசியில் ஞானோதயம் பெற்றுப் புத்தர் என்றபெயர் உற்றார். அவர் ஸ்தாபித்து போதித்ததே புத்த மதம். கயா என்ற பட்டணத்தில் ஒரு பெரியபுத்தஆலயம் இருக்கிறது. அதில் உள்ள போதி (அரச) மரத்தடியில் தான் புத்தர் உட்கார்ந்து ஞானோதயம் பெற்றதாகச் சொல்லுகிறார்கள்.

புத்தர் நாற்பது வருஷகாலம் ஊர் ஊராகச் சென்று, பிரசங்கித்து ஜனங்களுக்கு ஞானத்தை உபதேசித்து வந்தார். அரசர்களும், பிரபுக்களும், ஏழை ஜனங்களும் அவருக்குச் சீடர்களாயினர். புத்தர் தம் எண்பதாவது வயதில் காலஞ் சென்றார். அவருடைய பஸ்மத்தை

அவருடைய சீடர்கள் ஒவ்வொருவரும் கொஞ்சம்கொஞ்சமாக எடுத்துச் சென்றார்கள். அந்த பஸ்மத்தைப் பத்திரமாகத் தங்கப்பெட்டியில் வைத்து அழகிய ஆலயங்கள் கட்டினார்கள். பின்பு புத்தரைப்போல் விக்ரகங்களும் செய்தார்கள்.

புத்தருடைய உபதேசம் அநேகதேசங்களிற் பரவியது அவருடைய சிஷர்கள் பலதேசங்களிற் பிரயாணம் செய்து, ஆங்காங்கு பிரசங்கித்தனர். இப்போது நமது தேசத்தில் புத்தமதத்தினர் அதிகமாக இல்லை. ஆனால், வடக்கே திபேத், சீனா, ஜப்பான், கிழக்கே பர்மா, ஸயாம் முதலிய தேசங்களில் வெகு ஜனங்கள் புத்த மதத்தினர். லங்கைத் தீவிலும் புத்தர்கள் உளர்.

புத்தர் தமது சிஷர்களுக்காகச் சந்நியாசி சங்கம் ஒன்று ஏற்படுத்தினார். அவர்கள் மலையோரங்களிலும் ஆற்றோரங்களிலும் அழகிய பல மடங்கள் கட்டினார்கள். மலைப்பாறைகளில் விசாலமான குகைகள் கட்டிக்கொண்டும் வாழ்ந்தனர். அம்மடங்களும் குகைகளும் இப்போதும் நமது தேசத்தில் சில இடங்களில் உள.

புத்தர் போதித்த விஷயம் யாது ? பிராணிகளைக் கொன்று பலி கொடுப்பதால் பாவந் தவிரப் பயன் ஒன்றுமில்லை ; தன் ஆசையை ஒழித்தால், மனிதனுக்குத் துன்பம் இன்பம் இரண்டும் ஒரே மாதிரி இருக்கும்; ஒவ்வொருவனும் பெரியோர்களிடத்தில் வணக்கமும், எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பும் உடையவனாக இருக்கவேண்டும், என்பதுதான்.

---

# 8. ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீ வில்லிபுத்தூரில் விஷ்ணுசித்தர் என்ற ஒரு விஷ்ணு பக்தர் இருந்தார். அவருக்குப் பெரியாழ்வார் என்றும் பெயர் உண்டு. அவர் வைஷ்ணவ ஆழ்வார்களில் ஒருவர். அவர் பெருமாளுக்குப் பணிவிடை செய்துகொண்டு வந்தனர். ஒருநாள் அவர் நந்தவனம் கொத்திப் பூச்செடிகளுக்குப் பாத்திகள் கட்டிக்கொண்டிருந்தார். அப்போது அங்கே அழகான ஒரு பெண்குழந்தை இருக்கக் கண்டு, அவர் மிகவும் ஆனந்தமடைந்து, அக்குழந்தையை எடுத்து அருமையாக வளர்த்துவந்தார். பிள்ளையில்லாத தமக்கு, லக்ஷ்மி தேவியே இவ்விதம் பூமியில் வந்து அவதரித்ததாகப் பெரியாழ்வார் எண்ணினர். அவர் அந்த அருமைக் குழந்தையை ஆண்டாள் என்ற பெயருடன் வெகு அன்பாகப் போஷித்தனர். காலக்கிரமத்தில் அவளுக்குக் கல்வியும் கற்பித்து வந்தார்.

ஆண்டாள் என்ற அப்பெண்மணி தானும் ஆழ்வார் செய்யும் பணிக்கு உதவியாகமாலைகள் கட்டிக்கொடுப்பாள். சிறு பிராயமுதல் பெருமாளையே தியானித்து, அவரையே மணம் புரிவது என்று நிச்சயித்திருந்தாள். ஒருநாள் பெருமாளுக்காக அழகிய பூமாலை ஒன்று பெரியாழ்வார் தொடுத்து வைத்திருந்தார். அதை அனுப்புமுன், தான் அதைச் சூடிக்கொள்ளவேண்டும் என, ஆண்டாள் ஆசைகொண்டாள். தன் மனத்தில் மணளனாக வரித்த பகவானது திவ்ய அழகிற்குத் தான் தகுதியுள்ளவளா என்று எண்ணினள். உடனே ஆபரணங்களும் பட்டாடைகளும் அணிந்துகொண்டாள். பின்பு அம்மாலையைத் தரித்துக்கொண்டு கண்ணாடியில் தன் அழகான உருவத்தைப் பார்த்து, தனதருகில் திவ்விய

ரூபத்துடன் பகவான் நிற்பதாகப் பாவித்து, ஆனந்தமடைந்தாள். உடனே அம்மாலையை எடுத்து நலங்காதபடி கூடையில் வைத்துவிட்டாள். இதையறியாத ஆழ்வார் அம்மாலையை எடுத்துச்சென்று பெருமாளுக்குச் சாத்தி, ஆனந்தமாகத் தோத்திரம் செய்தார். ஆண்டாளும் தன் அன்பின் களஞ்சியமாகிய பகவானைத் தரிசித்து மகிழ்ந்தாள்.

அன்றுமுதல் ஆண்டாள் தினந்தோறும் பெருமாளுக்குப் பூமாலையை அனுப்புமுன், தான் சூடிக்கொண்டு ஆனந்தித்துப் பின் பகவானுக்கு அனுப்பிவந்தாள். ஒருநாள் ஆண்டாள் இவ்விதம் பூமாலையைச் சூடிக்கொண்டதை விஷ்ணுசித்தர் கண்டு கோபங்கொண்டு, "பகவானுக்கென்று கட்டிய மாலையை நீ அணிந்துகொள்வது அபசாரம்" எனக் கண்டித்தார். அன்றைய தினம் அவர் பகவானுக்கு மாலை கொண்டுபோய்க் கொடுக்காமல் மனம் வருந்தி யிருந்தார். பெருமாள் ஆழ்வாரது கனவில் தோன்றி, "கோதை சூட்டிக்கொண்ட பின்பு அனுப்பும் மாலை எனக்கு மிகவும் பிரியமானது" என்று தெரிவித்தார். உடனே விழித்தெழுந்த பெரியாழ்வார் ஸ்ரீ ஆண்டாள் என்னும் கோதையின் பெருமையை நினைந்து மகிழ்ந்தார். அதுமுதல் சூடிக் கொடுத்த நாச்சியார் என அவளுக்குப் பெயர் வழங்கியது. அவள் தினந்தோறும் புஷ்பமாலை கட்டித் தான் அணிந்து பார்த்துக்கொண்ட பிறகு, பெருமாளுக்குச் சூட்டி, மகிழ்ந்து, பகவானைக் குறித்துப் பல பாடல்கள் பாடித் துதித்து வந்தாள். வைஷ்ணவர்கள் வேதமெனக் கருதும் நாலாயிரப் பிரபந்தத்தில் ஆண்டாள் பாடிய பாடல்கள் ஒருபாகமாகும்.

இப்படியிருக்க, கோதைக்கு மணப்பருவம் வந்தது. அவளுக்கேற்ற புருஷனை எங்குத் தேடுவது எனப் பெரியா

ழ்வார் பெருங்கவலை கொண்டார். இதையறிந்த கோதை, "நான் ஸ்ரீரங்கநாதப் பெருமாளையே கணவனாக வரித்துள்ளேன். அவரே என் மணவாளர்" என்று தெரிவித்தாள். "இது எங்ஙனம் நடக்கும்?" என ஆழ்வார் ஆலோசித்து வருந்தினார். இப்படி வருந்தும் ஆழ்வாரிடம் பகவான் அன்பு கொண்டு, ஒருநாள் அவர் கனவில் தோன்றி, "உமது புத்திரியை ஸ்ரீரங்கம் அழைத்துவாரும். அங்கு அவளை நாம் ஏற்றுக்கொள்வோம்" என அருளினார். ஆழ்வாரும் கவலை நீங்கிக் கோதையை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட ஏற்பாடு செய்தார்.

இங்கு இப்படியிருக்க ஸ்ரீரங்கத்துப் பெரிய கோவில் ஜனங்களும் பகவானால் கட்டளையிடப்பெற்றுப் பல்லக்கு, குடை, சாமரம் முதலிய விருதுகளுடன் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்துசேர்ந்தனர். கோதையை அலங்கரித்துப் பல்லக்கில் ஏற்றிவைத்தார்கள். சகல வாத்தியங்களும் முழங்க, ஆண்டாள் ஸ்ரீரங்கம் பெரியகோவிலை அடைந்து பகவான் சந்நிதானத்தைச் சேர்ந்தாள். பெருமாளது திவ்விய ரூபத்தைக் கண்டவுடன் காந்தத்தைக் கண்ட இரும்பு போல், அன்பினால் இழுக்கப்பெற்றுக் கோதை பகவானுடன் ஒன்றுபட்டுக் கலந்து போயினள்.

இந்த ஆச்சரியமான திருமணத்தைக் கண்டு சகல ஜனங்களும் அதிசயித்து பகவானுடைய அருளை வியந்து பாடி மகிழ்ந்தார்கள்.

# 9. கோகலே

1925-ஆம் வருஷம் தென்னிந்தியாவில் உண்டாகிய வெள்ளத்தினல் வெகு ஜனங்கள் கஷ்டப்பட்டார்கள். அப்போது இந்திய ஊழியர் என்னும் சங்கத்தினர் ஜனங்களுக்கு மிகவும் உதவி செய்தார்கள். இந்திய ஜனங்களின் க்ஷேமத்திற்காக உழைப்பதே இச்சங்கத்தின் முக்கிய வேலை. இந்தச் சங்கத்தை ஏற்படுத்தியவர் ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே ஆவர்.



கோகலே மகாராஷ்டிர தேசத்தில் பிறந்தார். அவர் ஆங்கிலக் கல்வி பயின்று பாண்டித்தியம் அடைந்த பின், புனு நகரத்துக் கலாசாலையில் ஆசிரியராக அமர்ந்தார். நமது தேசத்தின் செல்வம் சேகரிக்கப்படும் விதத்தையும் அது செலவழிக்கப்படும் வழியையும் குறித்து ஆராய்ந்து பார்த்தார். இவ்விஷயத்தைப்பற்றி அடிக்கடி பிரசங்கங்கள் செய்வதும், வியாசங்கள் எழுதுவதுமே அவரது வழக்கம். இங்கிலாந்துக்குச் சென்று அங்கும் பல பிரசங்கங்கள் செய்தார். இந்திய ஜனங்கள் மிகவும் வறுமையான நிலைமையில் இருப்பதால் அவர்கள் தம் செல்வத்தையும் சுகத்தையும் விருத்தி செய்துகொள்வது அரிது. தற்காலம்

ஐரோப்பாவில் ஜனங்களது செல்வமும் க்ஷேமமும் பிரபலமாகவிருத்தியாவதுபோல நமது இந்தியா தேசத்தில் இல்லை. இவ்விஷயங்களைப்பற்றிப் பலகாலும் கோகலே சிந்தித்து, ஜனங்களின் க்ஷேமத்தை விருத்தி செய்யப் பலவாறு ஆலோசனை செய்தார். பம்பாய் மாகாணச் சட்ட சபையிலும், பிறகு இந்தியாச் சட்ட சபையிலும் கோகலே அங்கத்தினராயிருந்து வெகுவாக உழைத்தார். ஜனங்களுக்கு அதிகமாக வரிப்பாரம் இருப்பதையும் இராஜாங்கத்தில் ஆங்கிலேயர் அபரிமிதமான செலவு செய்வதையும் கண்டித்தார். எல்லா ஜனங்களும் நமது தாய் நாட்டின் நிலைமையை அறிந்து, அதன் க்ஷேமம் விருத்தியாவதற்குப் பாடுபட வேண்டுமானல், ஜனங்கள் எல்லோரும் முதலில் ஒற்றுமைப் படவேண்டும்; பிறகு தங்கள் கல்வியை விருத்தியாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து, தம் வாழ்நாளில் இவ்விரண்டு காரியங்களையும் செய்து முடிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்.

அவ்வாறே பொது ஜனங்களுக்கு இலவசப் படிப்பு அளிக்கப்பட வேண்டுமென்று சட்டசபையில் மிகவும் வாதித்தார் ஆயினும், அதனல் இராஜாங்கத்தில் அதிகச் செலவு ஏற்படுமென்று, பலர் அதை மறுத்துவிட்டார்கள். பிறகு இந்திய ஊழியர் சங்கத்தை ஏற்படுத்தினர். இச்சங்கத்தினர் பொதுஜனங்களுக்கு உழைப்பதற்காகவே தம் வாழ்நாட்களை ஈடுபடச் செய்தவர்கள். இவர்கள் உழைப்பால் ஜனங்களுள் வெகு காலமாக இருந்துவரும் ஜாதிமதங்களின் வித்தியாச அபிப்பிராயம் அழிந்து, நாமெல்லோரும் ஒரே தேசத்தினர் என்ற எண்ணம் பரவிவரும். கோகலே இறந்த பின் இச்சங்கத்தை நடத்தி வருபவர் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த ஒரு தமிழர். அவர் பெயர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்.

இருபது வருஷகாலம் கோகலே இவ்விதம் உழைத்து வந்தார். தேசமெங்குமுள்ள ஜனங்கள் அவரைக் கொண்டாடினார்கள். இராஜாங்கத்திலும் அவரை வெகுவாக மதித்து, அவருக்குக் கௌரவப் பட்டங்கள் அளித்தனர். அவர் 1915ஆம் வருஷம் தமது ஐம்பதாவது வயதில் காலஞ் சென்றார். அவர் இறந்துவிட்டாலும் அவர் உழைத்ததின் பலனாக அநேகர் ஜனங்களின் க்ஷேமத்திற்காகப் பாடுபட்டு வருகிறார்கள். அக்காலத்தில் அவர் விரும்பிய இலவசப் படிப்பு, இப்போது சில பட்டணங்களில் நடந்து வருகிறது

## 10. விஜயராகவ நாயகர்

சோழ ராஜாக்களுக்குப்பின், தஞ்சாவூரில் நாயகர் வம்சத்திய அரசர்கள் அரசாட்சி செய்தார்கள். அவர்களுள் முக்கியமானவர் விஜயராகவ நாயகர். இவர் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்தார்.



நமது ஜில்லாவில் உள்ள முக்கியமான கோட்டைகள் எல்லாம் இவர்காலத்தில்கட்டப்பட்டன. தஞ்சாவூர்க் கோட்

டையின் பெரிய மதிலும் அகழும் இவர் கட்டியவை. மதுரையில் ஆண்ட நாயக அரசர்களுடன் இவருக்கு அடிக்கடி சண்டை நேர்ந்தது. அதன் பொருட்டு இவர் தஞ்சைக் கோட்டையைப் பலப்படுத்தினார். தஞ்சை நகருக்கு நான்கு



புறமும் 10, அல்லது 20 மைலுக் கப்பாலுள்ள சில ஊர்களிலும் கோட்டைகள் கட்டினார். திருக்காட்டுப்பள்ளியிலிருந்த கோட்டையும் இவரால் கட்டப்பட்டதுதான். தெற்கே மறவ நாட்டிலிருந்து அடிக்கடி மறவர்கள் படை யெடுத்து வந்து, கிராமங்களில் உபத்திரவம் செய்தார்கள். அவர்களை அடக்கும்படி அறந்தாங்கியிலும் பட்டுக்கோட்டையிலும் கோட்டைகள் கட்டி, அங்குக் காவற் சேனைகளை அமைத்தார்.

விஜயராகவ மன்னர் இவ்விதம் கோட்டைகள் மாத்திரம் கட்டினதன்றி, அநேக மண்டபங்களும் கோவில்களும் கட்டுவித்தார். அவருக்கு மந்திரியாக வேலைபார்த்தவர் கோவிந்த தீக்ஷிதர். இவர் காலத்தில் காவேரிக்கரையில், அநேக இடங்களில், மண்டபங்களும் படித்துறைகளும் ஏற்பட்டன. கோவிந்த தீக்ஷிதருடைய முயற்சியால் திருவையாற்றில் புஷ்ய மண்டபம் கட்டப்பட்டது. மேலும், அவரால் மன்னார்குடியில் ராஜகோபால ஸ்வாமி கோவில் புதுப்பிக்கப்பட்டு ஹரித்ரா நதிக் குளமும் வெட்டுவிக்கப்பட்டது.

“கோவில் கட்டினார்” என்று நாம் சுலபமாகச் சொல்லி விடுகிறோம். இவ்வளவு கோட்டைகளையும், கோவில்களையும் கட்டுவதற்கு எவ்வளவு பணம் வேண்டியிருக்கும்! எவ்வளவு

ஆட்கள் வேண்டியிருக்கும் ! இராஜ்ஜியத்தில் செல்வம் மிகுந்து இருந்தால் அல்லவோ இக்காரியங்களைச் செய்யமுடியும்.



காவேரிக்கரையில் உள்ள முக்கிய ஊர்களில், கோவிந்த தீக்ஷிதர் முயற்சியால், காஞ்சிபுரத்திலிருந்து அநேக பிராமணர்கள் வந்து குடியேறினார்கள். அவர்களுக்கு நிலங்களும் வீடுகளும் சர்வமானியமாக விடப்பட்டன. இப்பொழுதும் மாயூரம், திருவிடைமருதூர் முதலிய ஊர்களில் சர்வமானிய அக்ரகாரங்கள் உண்டு.

இவர் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து கப்பல் மார்க்கமாகப் பல ஐரோப்பியர் வந்தனர். தஞ்சாவூருக்கு வந்த வியாபாரக் கூட்டத்தாருக்கு டச்சுக்காரர் என்று பெயர். அவர்கள் நாகப்பட்டணத்தில் பண்டகசாலை கட்டிக்கொண்டு

வியாபாரம் செய்ய விரும்பினார்கள். அரசர் அதற்கு அனுமதி கொடுத்தார். அவரது உத்தரவு வெள்ளிப் பட்டயத்தில் கொடுக்கப்பட்டது. 1660-ஆம் வருஷம் கொடுக்கப்பட்ட அந்த வெள்ளிப் பட்டயத்தை இப்போதும் டச்சுக்காரர், படேவியாவிலுள்ள தங்கள் பொருட்காட்சிச் சாலையில் வைத்திருக்கிறார்கள்.

விஜயராகவ அரசர் மிகவும் தெய்வபக்தி உள்ளவர். தினந்தோறும் பூஜை செய்யாமல் போஜனம் செய்வதில்லை. ஒருசமயம் மதுரை நாயகர் சேனை தஞ்சாவூரை நெருங்கி வந்துவிட்டபோதும், அரசர் பூஜைசெய்துகொண்டு இருந்தார். அவர் விக்கிரகத்தின்மீது சாத்தியிருந்த புஷ்பங்களை எடுத்துக்கொடுத்து, அவைகளை கோட்டைவாயிலிற்போட்டு வைத்தால் விரோதிகள் பயந்து நின்று விடுவார்கள் என்று சொன்னாராம். அதனால் அரசர் சண்டை செய்யப் பயந்ததாக எண்ணக்கூடாது. பின்பு அவர் இராஜபுத்திர வீரர்களைப்போலவே வெகுதீரமாக யுத்தம் செய்து, போர்க்களத்திலேயே இறந்து வீரசொர்க்கமடைந்தார். தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு அவர் கோட்டையை விட்டு ஓடிப்போயிருக்கலாம். ஆனால் சுத்த வீராகிய விஜயராகவ நாயக அரசர் அப்படிச் செய்யவில்லை. தம் மனைவி மக்கள் எதிரிகள் வசம் அகப்பட்டுத் தவிக்காமலிருக்கும் பொருட்டு அரண்மனையில் வெடிமருந்து வைத்துத் தீயிடச் சொன்னார். பின்பு அவரும் அவர் பிள்ளை மன்னாரு நாயகரும் சில வீரர்களுடன் எதிரிகளைத் தாக்கி, வீராவேசத்துடன் சண்டைசெய்து இறந்துபோயினர்.

———

# 11. அசோகர்

பல நூறு வருஷங்களுக்குமுன் கங்கா நதிக்கரையில் பாடலிபுத்ரம் என்ற ஒரு பெரிய பட்டணம் இருந்தது. அதில் அநேக அழகிய தெருக்களும், பல மாளிகைகளும் உண்டு. பட்டணத்தைச் சுற்றிப் பெரிய மதில்கள் இருந்தன. நடுவில் உள்ள விசாலமான மைதானத்தில் ஜனங்கள் சந்தை கூடினர். அங்கு அவர்கள் தாம் தாம் கொண்டுவந்த பொருள்களை விற்றுத் தத்தமக்குத் தேவையான வேறு பொருள்களை வாங்கிச் செல்வது வழக்கம்.



இவ்விதம் சந்தை கூடும் இடத்தில், ஒருநாள் தென்னைமரத்தைப்போன்ற உயரமான ஒரு கற்றூண் நாட்டப்பட்டது. அதனருகில் ஒரு உயர்ந்த மேடை அமைக்கப்பட்டு, அதின்மீது பட்டு ஆடைகள் விரிக்கப்பெற்ற ஒரு ஆசனம் இருந்தது. அங்கு ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்திருந்தனர். சிலர் கற்றூணை நெருங்கி அதின்மேல் வெட்டப்பட்டிருந்த எழுத்துக்களை வாசித்தனர். வேறு சிலர் அங்கு அன்று நடக்கும் விசேஷம் யாதென்றறிய ஆவலாய் எதிர் பார்த்தனர்.

சற்று நேரத்திற்கெல்லாம் வாத்திய ஒலி எழுந்ததும், ஜனங்கள் "மகாராஜா வந்து விட்டார்" என்று பேசிக்கொண்டார்கள். சந்நியாசி உடை அணிந்த பலர் வந்து, கற்றூண் அடியில் நின்றார்கள். பின்பு நீண்ட

வெள்ளித் தடிகளும், சாமரங்களும், குடைகளும் தாங்கிய சிலர் சூழ்ந்துவர மகாராஜா வந்தார். அவர் மெதுவாக மேடையில் ஏறி ஆசனத்திலமர்ந்தார். அவரே அசோக மஹாராஜா.

அரசர் வந்தவுடன், சகல ஜனங்களும் சந்தோஷமாக ஆரவாரித்தனர். "தேவப்பிரியராம் அசோகர் ஆயுள் பெருகுக" என்று வாழ்த்தினர். அரசருடன் வந்தவருள் ஒருவர் பெரிய முனிவர் போலக் காணப்பட்டார். அவர் சந்நியாசிகளின் தலைவர் எனத் தெரியவந்தது. அவர் மேடைமேல் நின்று யாவரும் அமைதியாய் இருக்கும்படி கையமர்த்தினார்.

பின்பு அவர் ஜனங்களைப் பார்த்துப் பேசலாயினர்:—"மகாராஜாவின் இஷ்டப்படி இந்தக் கற்றூண் இவ்விடம் நாட்டப்பட்டது. புத்ததேவர் அருளிய நன்மார்க்கத்தைச் சகல ஜனங்களும் கடைப்பிடித்து நடந்து நன்மையடைய வேண்டும் என்று அவர் வெகு ஆசைப்படுகிறார். அதனால் ஜனங்களுக்குச் சந்தோஷமும் நீண்ட ஆயுளும் உண்டாகும். இத்தூண்மீது உள்ள நீதி வாக்கியங்கள் தினந்தோறும் உங்கள் கண்களிற் பட்டு மனத்தில் உருத்தும். என் தோழர்களாகிய பிக்ஷுக்கள் தினந்தோறும் இவ்விடம் பிரசங்கம் செய்வார்கள். நமது தேசத்தில் உள்ள சகல ஜனங்களும் சந்தோஷமாக வாழவேண்டும் என்றே அசோக மகாராஜா பாடுபடுகிறார். ஆகையால் யாவரும் இதை அன்புடன் ஏற்றுச் சுகம் அடைவீர்களாக!" இதைக் கேட்ட ஜனங்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

உடனே மகாராஜாவும் எழுந்து நின்று, "ஜனங்களே! கேளுங்கள். கடும்போர் புரிந்து இராஜ்ஜியங்களைச் சேர்ப்பதனால், பேரும் புகழும் வாரா. யுத்தத்தினால் ஜயிப்பதைவிடச்

சமாதான நன்மார்க்கத்தினால் வெற்றி யடைவது நீடித்து நிற்கும். ஆதலின், இனி என் ஆயுள் முழுவதும் சகல ஜனங் களும் க்ஷேமமாக வாழ்வதற்காக நான் பாடுபடுவேன். தேவர்கள்போல யாவரும் சந்தோஷமாக வாழவேண்டும். அதற்கான வழி தர்ம மார்க்கம் ஒன்றே! ஜீவவதை செய்வ தனாலும், கடுஞ்சொற் சொல்வதனாலும், கெட்ட எண்ணங் கள் கொள்வதனாலும் நம் ஆயுளும் ஆரோக்கியமும் குறைந்து போம். யாவரும் தர்மமார்க்கம் இன்னதென்று அறிந்து அதன்படி நடக்கும்பொருட்டுப் பற்பல இடங்களில் இவ் விதக்கற்றூண்களைநாட்டுவேன். மகான்களாகிய இந்தச் சந்நி யாசிகள் ஊர் ஊராகச் சென்று தர்ம மார்க்கத்தைப் போதிப் பார்கள். உலக முழுவதும் தர்மமார்க்கம் பரவி, ஜனங்கள் க்ஷேமமாக வாழ வேண்டுமென்ற பெருங்கவலை என்னை எப்போதும் உருத்துகின்றது. நான் மேற்கொண்ட இக் காரியம் நன்றாக முடிந்தால் வெகு சந்தோஷமடைவேன்!'' என்று கூறினார்.

ஜனங்களின் க்ஷேமத்தைக் குறித்து இவ்வளவு கவலை கொள்ளும் இராஜாவின் நற்குணத்தைப்பற்றி எல்லோரும் மெச்சிக்கொண்டனர். அச்சமயம் அரசரும் எழுந்து தம்மு டன் வந்தவர்களுடன் திரும்பிப் போனார். ஜனங்கள் தூணில் இருந்த வாக்கியங்களை வாசித்துக் கொண்டு நின்றனர். பலர், அன்றையிலிருந்து அம்மாதிரி தாம் நடப் பதாக உறுதி செய்துகொண்டு தத்தம் வேலைக்குச் சென் றனர். கூட்டம் கலைந்தது.

படத்தில் காட்டியபடி, கற்றூண்கள் நமது தேசத்தில் அநேக இடங்களில் இப்போதும் காணப்படுகின்றன. அவை கள்மீது எழுதியுள்ள பாஷை நமக்கு இப்போது தெரியவரா து. ஆயினும், படித்த பெரியோர்கள் அதை அறிந்து மொழி

பெயர்த்திருக்கிறார்கள். 2500 வருஷங்களுக்குமுன் வாழ்ந்த அசோகர் பெயர் ஒருவரும் மறவாமல் இருக்கும்படி புகழுடன் பிரகாசிக்கிறதல்லவா ?

உனது நோட்டுப் புத்தகத்தில் அசோகர் கற்றாண் சித்திரம் எழுதி, அவர் பெயரும் புகழும் உந்நதமா யிருப்பதற்குள்ள காரணத்தையும் குறித்து வை.

---

## 12. குமணர்

உலகத்தில் ஏராளமாய்த் தர்மம் செய்த இராஜாக்களில் குமணர் ஒருவர். ஜனங்கள் இவரைப் புகழ்ந்தது இவருடைய தம்பிக்கு வெறுப்பை உண்டாக்கிற்று. அவன் சில துன்மார்க்கர்களின் உதவியினுல் குமணரை அரண்மனையினின்றும் துரத்திவிட்டான். பிறகு அவன், தானே அரசன் என, முடிசூட்டிக் கொண்டான். குமணர் ஆதரித்து வந்த புலவர்களையும், வித்வான்களையும் ஊரைவிட்டு ஓட்டினுன். குமணருக்கு நேர்ந்த கஷ்டத்திற்காக ஜனங்கள் வருந்தி அழுதார்கள். இளையவன் இதைக்கண்டு பொருமை கொண்டான். தன் அண்ணனைக் கொன்று தலையைக் கொண்டுவருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாக விளம்பரம் செய்தான்.

### காட்சி 1

(கந்தைத் துணி உடுத்திய ஒரு எளிய புலவர் காட்டு வழியே செல்லுகிருர்.)

புலவர் :—“ ஆஹா ! இப்படியா ஆயிற்று என் கதி ! என் கவித் திறமையை அறிந்த குமண மகாராஜர் என்னை எவ்வளவு மேன்மையில் வைத்திருந்தார். ஐயோ பாவம்! எனது

துரதிருஷ்டம் அந்த மகானுபாவனையும் பிடித்துக் கொண்டதே! அந்தப் பாவி இளையவன் அவரைக் கானகத்தே விரட்டினன். சுகமாக அரண்மனையில் வாழ்ந்திருந்த குமணர் கானகத்தில் எவ்வாறு இருப்பார்? வறுமையிற் பிறந்த நானே இவ்விதம் தவிக்கிறேனே! வீட்டை விட்டுப் புறப்பட்டு மூன்று நாட்கள் ஆயினவே, மனைவியும் பிள்ளையும் அன்ன ஆகாரமின்றி வருந்துவார்களே! ஈச்வரா! என்ன செய்வது? எனக்கும் பசியின் கொடுமை சகிக்கமுடியவில்லை.” [என்று கூறிய வண்ணம் சோர்ந்து கீழே உட்காருகிறார். காட்டின் மற்றொரு புறத்திலிருந்து இரண்டுபேர் வருகிறார்கள்.]

அவர்களில் ஒருவர், “அரசே! இங்கேதான் சமீபத்தில் ஏதோ ஆள் அரவம் கேட்டது. தாங்கள் சற்று மறைந்து இருக்க வேண்டுகின்றேன்.”

குமணர்:—ரகுபதி! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நீயே இப்போது என்னை “அரசே” என்று அழைத்தாய். நான் ஒளிந்துகொள்வதால் என்னைத் தேடிவரும் ஆளுக்கு நானிங்கு இருப்பது தெரியாமற் போய்விடுமா? நாம் ஏன் பயப்படவேண்டும். ‘எல்லாம் எனையாளும் ஈசன் செயல்!’ விதிப்பயன்படி யாவும் நடக்குமே யன்றி நம்மாலாவது ஒன்றுமில்லை.

(புலவர் கண்விழித்துப் பார்க்கிறார்) “யாரோ தெரியவில்லை, பேச்சுக் குரல் கேட்கிறதே.” (மெதுவாக நகர்ந்து, எழுந்து, தள்ளாடிக் கொண்டு, அரசரை நோக்கி வருகிறார்.)

ரகுபதி:—அதோ ஓர் ஆள் வருகிறான்.

குமணர்:—ஐயோ பாவம்! இவரைக் கண்டு இவ்வளவு நடுங்கினயே.

ரகுபதி :—அரசே! தங்கள் தலையைக் கொய்து கொண்டு வருபவனுக்கு ஆயிரம் பொன் இனும் கொடுப்பதாக விளம்பரம் செய்திருக்கிருரே, தங்கள் தம்பி !

குமணர் :—அப்படி விரும்பி வருபவன் நிச்சயமாக வெகு கஷ்ட ஸ்திதியில் இருக்கவேண்டும். அவனுக்கு நாம் உதவி செய்ய வேண்டியது அவசியமே !

(புலவரும் சமீபம் வந்து குமணராஜாவைக் கண்டு, வெகு மகிழ்ச்சி கொண்டு அவரை வணங்கிக் கீழே விழுகிருர்.)

குமணர் :—ஓகோ ! இவர் நமது சத்தியப் புலவரல்லவா ? புலவரே எழுந்திரும். என்ன உடம்பு ? (என்று கீழே குனிந்து அவரைக் கைதூக்கி எழுப்பி வைக்கிருர்.)

புலவர் :—அரசே ! நானென்ன சொல்வது ? தாங்கள் நாட்டைவிட்டுச் சென்றது முதல் ஜனங்கள் எல்லோரும் கஷ்டம் அனுபவிக்கிருர்கள். நாங்கள் யாவரும் வறுமையினுல் வருந்துகிறேம். நான் வீட்டைவிட்டுப் புறப்பட்டு மூன்று நாட்களாயின.

குமணர் :—ஐயோ ! பாவம் ! வெகு கஷ்டம். (ரகுபதியைப் பார்த்து) உன் கச்சையில்கட்டிவைத்திருக்கும் இரண்டு அப்பத்தையும் இவருக்குக் கொடு; இவர் குடிக்கத் தண்ணீரும் கொண்டுவா.

(அப்படியே ரகுபதி அப்பத்தைத் தந்து தண்ணீரும் கொண்டு வந்து கொடுத்தான். புலவரும் சந்தோஷமாகச் சாப்பிட்டார்.)

ரகுபதி :—அரசே ! ஜனங்கள் எல்லோரும் இவ்விதமே வருந்துவதாகக் கேள்விப்பட்டேன்.

புலவர் :—என் மனைவி மக்கள் பட்டினியாய்த் தவித்திருக்க, நான் இந்த உணவைத் தின்றதால் என் மனம் கஷ்டப்படுகிறது.

குமணர் :—புலவரே! வருந்த வேண்டாம். உமது தரித்திரத்தை நீக்க மருந்து சொல்லுகிறேன். என் தலையைக் கொண்டுபோய்க் கொடுப்பவருக்கு ஆயிரம் பொன் இனும் கொடுப்பதாக என் தம்பி விளம்பரம் செய்திருக்கிருன். இதோ கத்தி! இதோ என் தலை! எடுத்துச் செல்லும், சீக்கிரம்! (என்று கத்தியை உருவி நீட்டிக்கொண்டு தலை குனிந்து நிற்கிருர்.)

ரகுபதி :—(அவசரமாக அரசர் கையினின்றும் கத்தியைப் பிடுங்கி) ஆஹா! இது என்ன சாகசம்! இப்படியும் சொல்லுவதுண்டா ?



புலவர் :—அரசே! உமது தயாள குணத்தையும் தர்ம சிந்தனையையும் என்னென்று புகழ்வேன்! இந்த ஆயிரம் பொன்னை இச்சித்து நான் இக்கேவலமான காரியத்தையும் செய்வேனே ?

ரகுபதி :—புலவரே! இதற்குள் அரசரே தம் தலையை வெட்டிக்கொண்டிருப்பார். அதைத் தடுப்பதற்காகவே நான் கத்தியைப் பிடுங்கினேன்.

குமணர் :—என் தர்மத்தைக் கெடுத்து விட்டீர்கள். என் உதவியை நாடி வந்தவருக்கு நான் இல்லை யென்பதில்லை. ரகுபதி! கத்தியைக்கொண்டு என் தலையைக் கொய்து இப்புலவரிடம் கொடு.

ரகுபதி :—அரசே ! இப்புலவருக்கு உதவிசெய்வதாக நான் வாக்களிக்கிறேன். இது சத்தியம் !

குமணர் :—எவ்வாறு உதவி புரிவாய்? எனக்கு ஒரு வகையும் விளங்கவில்லை.

ரகுபதி :—எனக்குப் பதுமைகள் செய்யத் தெரியும். தங்களது தலைபோல ஒரு பொய்த் தலை செய்துகொடுத்து, இப்புலவர் சன்மானம் பெறும்படி செய்கிறேன். எனது கைவன்மையைப் பாருங்கள்.

புலவர் :—இது நல்ல யோசனை !

குமணர் :—ஆமாம் ! ஒருகால் அதை அவன் பொய்த் தலை என்று கண்டுகொண்டால், பாவம் ! நமது புலவரின் தலைக்கே மோசம் வந்துவிடும். என்ன செய்வது ?

புலவர் :—எனக்கு உதவி செய்யத் தங்கள் தலையைத் தாங்கள் கொடுக்கச் சித்தமாயிருக்க, என் தலை ஒரு பிரமாதமாகுமா ?

ரகுபதி :—பொய்த்தலை யென்று கண்டுபிடிக்கவே முடியாது. நான் உறுதியாகச் சொல்லுகிறேன்.

குமணர் :—சரி ! அப்படியே செய்யலாம், புலவரே ! எழுந்திரும் ! நாம் செல்வோம். நாளை இங்கே தங்கிப் பின்பு நீங்கள் நகரத்துக்குச் செல்லலாம்.

(எல்லோரும் போகிறார்கள்.)

## காட்சி 2

(குமணர் தம்பி தன் அரண்மனையில் நாற்காலிமீது உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறான்.)

இளையவன் :—என் அண்ணனுர் கீர்த்தி ஒருபோதும் அழியாது. நான் என்ன பாடுபட்டும் என்னை ஒருவரும்

புகழ்ந்து பேசுவதில்லை. என் முன், எனது இரண்டொரு நண்பர்கள் மாத்திரம் முக ஸ்துதியாகப் பேசுகிறார்கள். அவர்களும் என் பொருளை அபகரிக்கச் சதியாலோசனைசெய்கிறார்கள். என் தமயனார் தலையைக் கொண்டுவருபவருக்கு ஆயிரம் பொன் கொடுப்பதாகச் சொன்னேன். இத்தனை நாட்களாக ஒருவரும் கொண்டுவரவில்லை. என் தமயனார் அரசராயிருந்த காலத்தில் இதேவிதமாக என் தலையைக் கொண்டுவரும்படி அவர் கட்டளையிட்டிருந்தால், ஒரு நிமிஷ நேரத்தில் என் தலையைக்கொண்டுபோயிருப்பார்களல்லவா! ஆஹா! என்ன அதிசயம்! நான் ஏன் இந்தத் தொல்லையில் மாட்டிக்கொண்டேன்! என் மனம் தவிக்கிறது. நல்ல தூக்கம் கிடையாது. (யாரோ வருவதுபோலச் சப்தம் கேட்கிறது) யாரது அங்கே?

(ஒரு சேவகன் உள்ளே வந்து, நமஸ்கரித்து நிற்கிறான்.)

சேவகன் :—மகாராஜா! யாரோ ஒருவர் தங்களை அவசரமாகக் காண வந்திருக்கிறார். கையில் ஒரு மூட்டை வைத்திருக்கிறார். அதைத் தங்களுக்குக் காட்ட வேண்டுமாம்.

இளையவன் :—ஆ! மூட்டையா? உடனே வரச்சொல்.

(சேவகன் போகிறான்.)

ஆ! ஒருவேளை அண்ணனார் தலையைத்தான் யாரேனும் கொண்டு வந்திருப்பாரோ, என்னவோ! ஐயோ! என் செய்வேன்.

(புலவர் ஒரு மூட்டையுடன் வந்து மூட்டையை அவிழ்த்து அதிலுள்ள பொய்த் தலையை அரசன் முன் வைக்கிறார்.)

புலவர் :—அரசே! தாங்கள் விளம்பரஞ் செய்தபடி எனக்கு ஆயிரம் பொன்னைக் கொடுக்கும்படி உத்தரவு செய்யக் கோருகிறேன்.

இளையவன் :—(திடுக்கிட்டு எழுந்து ஓடிவந்து, தலையைப் பார்த்துக் கதறுகிறான்.) "ஐயோ! என்னைவளர்த்த அண்ணாவே!" (என்று அலறி விழுகிறான்; விம்மி விம்மி அழுகிறான்.) பின்பு புலவரைப் பார்த்து,

"புலவரே! என்ன கொடிய காரியம் செய்தீர்! ஐயோ! நான் ஆத்திரத்தில் சொல்லிவிட்டுத் தவிக்கிறேனே!"

புலவர் :—ஆம்! வாஸ்தவம்; தானாடாவிடினும் தன் சதை ஆடும்.

இளையவன் :—புலவரே! தரும ஸ்வரூபியான என் அண்ணாரை இனிக் காண்பேனோ?

(என்று மறுபடியும் சோர்ந்து விழுகிறான்.)

புலவர் :—(அப்பால் விலகித் தமக்குள்ளாக) ஐயோ பாவம்! இவன் நிஜமான தலையென்று எண்ணித் தவிக்கிறான்!

இளையவன் :—(கண் விழித்துப் புலவரைப் பார்த்து) புலவரே! என்னைக் காப்பாற்றும். என் மூளை கலங்குகிறது.

புலவர் :—உமது ஆக்ஞைப்படி தலையைக் கொணர்ந்தேன், வீண்பேச்சு எதற்கு? எனக்குச் சேரவேண்டிய ஆயிரம் பொன்னைக் கொடுத்து என்னை அனுப்பும். இப்போது வருந்துவதால் யாது பலன்?

இளையவன் :—ஐயா! என் அண்ணார் அருமையைநீர் அறியீரா? அவரை உயிருடன் அழைத்து வந்திருந்தால் உமக்குப் பொன்பதினாயிரம் வேண்டுமாயினும் தருவேனே! (புலவர் புன்சிரிப்புக்கொள்ளுகிறார். இதைப் பார்த்து துக்கம்மிகுந்து) ஐயா! நல்லிசைப் புலவர்கள் இறந்தவர்களை மீள எழுப்பவும் கூடுமே! ஆகையின் நீர் தயைசெய்து என்

அண்ணனை உயிருடனே அழைத்து வாரும். உமக்குக் கோடி புண்ணியமுமுண்டு, நானும் பதினயிரம் பொன் தருகிறேன்.

புலவர் :—தலையை வாங்கியபின் உயிர் தங்குமா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உமது வாக்கைப் பிரட்டச் செய்யும் தந்திரம்போ லிருக்கிறதே இது!

இளையவன் :—ஐயா! உமக்குக் கோடி நமஸ்காரம். இத்தலையை நீரே எடுத்துச் செல்லும். அண்ணு! உம்மை நான் இனிக் காண்பேனே!

(அலறி விழுந்து மூர்ச்சிக்கிருன்.)

புலவர் :—(அவன் மூர்ச்சையைத் தெளிவித்து அவனை எழுப்பிப் பொய்த்தலையை எடுத்துக்கொண்டு) நான் கானகம் சென்று இத்தலையை உம் தமையனுருடலிற் பொருத்தி அவரைச் சீக்கிரம் எழுப்பி அழைத்து வருவேன், வருந்தா திரும். (போகிருர்).

(காட்சி முடிகிறது)

---

# 13. கம்பர்

## "கல்வியிற் சிறந்தவர் கம்பர்"

நம் தமிழ்ப் பாஷையில் கம்பர் இயற்றிய இராமாயணம் மிகவும் சிறந்ததோர் காவியம். நமது முன்னேர்கள் நாம் அனுபவித்து மகிழும்படியாக நமக்கு வைத்துள்ள பெருஞ் செல்வத்தில் கம்ப ராமாயணம் முக்கியமானது.

கம்பர் சுமார் ஆயிர வருஷங்களுக்கு முன் வாழ்ந்திருந்தார். அவர் மாயூரத்திற்குச் சமீபத்திலுள்ள திருவழுந்தூரில்

ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சிறுவயதிலேயே தந்தை இறந்துபோக, அவரைத் திருவேண்ணெய் நல்லூர் சடையப்ப முதலியார் என்ற ஒரு சீமான் ஆதரித்து வந்தார். பின்பு அவர் தமிழ்ப் பாஷையை நன்றாகக் கற்று, சரஸ்வதி தேவியின் அருளால் பாடல்கள் பாடும் வல்லமை பெற்றார். அக்காலத்தில் அரசராயிருந்த குலோத்துங்கச்சோழர் கம்பரது கல்விப் பெருமையைக் கேள்வியுற்று, அவரைத் தமது அரண்மனைக்கு வரவழைத்து உபசரித்தார். கம்பரும் சோழ மகாராஜருக்கு உவந்த தோழராக விளங்கி வந்தார். அரசரது வேண்டுகோளுக்கிணங்கிக் கம்பர் இராமாயணம் பாடி முடித்தார். அரசர் கொலுவீற்றிருந்து இராஜ்ஜிய விவகாரங்களைக் கவனிக்கும்போதும், பொழுதுபோக்காகத் தோட்டத்தில் உலவும்போதும் கம்பர் அரசர்க்கருகே எப்போதும் இருந்து துணை புரிந்தார். ஒரு சமயம் இவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டது. தம்கௌரவத்தையும் மரியாதையையும்குறைத்துக்கொண்டு அரசர் கட்டளைப்படி நடக்கும் குணம் கம்பருக்கு இல்லை! ஆதலால், அரசர் தம் நாட்டை விட்டுச் செல்லும்படி கம்பருக்குக்கட்டளை யிட்டனர். கற்றோர்க்குச் சென்ற விட மெல்லாம் சிறப்பு. ஆகையால், கம்பரும் தைரியமாகவே சேர நாட்டிற்குச் சென்றனர். கம்பரது கல்வித்திறமையை யறிந்த சேர மகாராஜா அவரை உபசரித்து வெகு ஆதரவுடன் நடத்திவந்தார். தம் சபையில் மாணிக்கம்போல் பிரகாசித்து விளங்கிய கம்பர் இல்லாததைக் கண்டு, சோழ மகாராஜா கன்றை இழந்த பசுப்போல வருந்தினர். கம்பரைத் தேடி அழைத்து வரும்படி நாற்புறமும் ஆட்களை அனுப்பினர். கடைசியில் சேர அரசருடன் இருக்கும் கம்பரை வெகுவாகவேண்டித் தம் அரண்மனைக்கு அழைத்தார். சோழ ராஜருக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று கம்பர்

எண்ணினர். சேர அரசருடன் சோழ நாட்டிற்கு வந்தார். சேரர் தமக்கு உபசரிக்கும் விதத்தைச் சோழர் அறியும்படி செய்தார். சோழரும் கம்பருடைய பெருமையை அறிந்து மகிழ்ந்தார். கம்பரும் ஏழை எளியவர்களுக்கு உதவி புரிந்துகொண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தார்.

கம்பரின் குணங்களைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. ஒரு சமயம் ஓர் எளிய விறகுவெட்டி ராஜ சபையில் தானும் பாடல் பாடி அரசரிடம் வெகுமதி பெறுவதற்கு வந்தான். அவனுக்குப் பாடல் இயற்றத் தெரியாவிடினும், அவன் அங்கு மிங்கும் கேட்ட சில பதங்களைச் சேர்த்து ஒரு பாட்டாகப் பாடினன். இப் பாடலைக் கேட்ட சபையோர்கள் எல்லோரும் சிரித்தார்கள். அப்பாட்டு வருமாறு:—

மண்ணுண்ணி மாப்பிள்ளையே
காவிறையே கூவிறையே—உங்களப்பன்
கோவிற் பெருச்சாளி கன்ன பின்ன
மன்ன தென்ன சோழங்கப் பெருமானே.

கம்பரோ, அவ்வெளியவனைக்கண்டு இரக்கப்பட்டு, அவன் பாடலுக்கு வெகு சாமர்த்தியமாகச் சிறந்த பொருள் சொன்னர். பின்பு அரசரிடம் அவனுக்குச் சன்மானம் வாங்கிக்கொடுத்தார்.

கம்பர் இராமாயணம் பாடியதைப்பற்றியும், அதை அரங்கேற்றியதற்குப் பட்ட கஷ்டங்களைப்பற்றியும் பல கதைகள் உள்ளன. நீ பெரியவனயினபின் கம்பரைக் குறித்து அதிக விவரமாகத் தெரிந்துகொண்டு, அவர் இயற்றிய இராமாயணத்தையும் வாசிக்கவேண்டும்.

விறகுவெட்டி, தனக்குக் கம்பர் செய்த உதவியைத் தன் மனைவிக்குச் சொல்லுவதுபோல ஒரு வியாசம் எழுதுக.

# 14. இராணி மங்கம்மாள்

மதுரைப் பட்டணத்தில் மங்கம்மாள் சத்திரம் என்ற ஒரு பெரிய கட்டடம் இருக்கிறது. யாத்திரிகர் பலர் அங்கே தங்குகிறார்கள். இச்சத்திரத்தைக் கட்டிய மங்கம்மாள் என்னும் அரசியைப்பற்றி இப்பாடத்தில் படிப்போம்.

திருமலை நாயகரின் பேரப்பிள்ளையாகிய சோக்கநாத நாயகருக்குப் பிறகு, அவர் மகன் கொஞ்சகாலம் அரசு புரிந்து காலம் சென்றான். இவனுடைய மகன் குழந்தையாயிருந்தபடியால், சொக்கநாத நாயகரின் மனைவியாகிய மங்கம்மாள் தன் பேரப்பிள்ளைக்குத் தக்க வயது வரும் வரையில் இராஜ்ஜியாதிகாரஞ் செய்துவந்தாள்.

நமது தேசத்தில் பெரும் புகழுடன் அரசாட்சி செய்த ஸ்திரீகளும் சிலர் உளர். அவர்களுள் மங்கம்மாள் முதன்மையானவள் என்னலாம்.

இவள் காலத்தில் இராஜ்ஜியம் மிகவும் செழித்து ஓங்கியது. சேனாபதியாகிய நரசப்பய்யர் அயல்நாட்டு அரசர்களைத் தோற்கடித்து, அவர்களிடமிருந்து கப்பம் வாங்கிக் கொண்டு வந்தார். அவர்களில் தஞ்சாவூர் நாயக ராஜாவும், திருவாங்கூர் ராஜாவும் பெருத்த அரசர்கள்.

தேசத்திய ஜனங்களுக்கு இராணி பலவிதத்திலும் உதவிபுரிந்தாள். பிரயாணத்திற்கு வசதியாக நல்ல ரஸ்தாக்கள் போடுவித்தாள். மங்கம்மாள்சாலை என்பது இப்போதும் ஒன்று உண்டு. வழிநெடுக மரங்களும், சௌகரியமான இடங்களில் சத்திரங்களும் ஏற்படுத்தினாள். ஜலக் கஷ்டம் உள்ள கிராமங்களில் குளங்கள், கிணறுகள் வெட்டு

வித்தாள். கோவில்களும் அழகிய கட்டடங்களும் கட்டுவித்தாள். அக்கட்டடங்களில் சிலவற்றை மதுரையில் இப்போதும் பார்க்கலாம்.

இராஜ்ஜியத்தை நியாயமாகவும் சாமர்த்தியமாகவும் பதினாறு வருஷகாலம் அரசாட்சி செய்தாள். அவளது நீதி முறைமையைப்பற்றி ஒரு கதை வழங்குகிறது. அவளுடைய தம்பி திருச்சிராப்பள்ளியில் சிற்றரசனாக அதிகாரம் செலுத்திவந்தான். அவன் ஒரு சமயம் ஒரு ஸ்திரீயை வருத்தினான். அவள் அன்றிரவே மதுரைக்கு ஓடிவந்து இராணி மங்கம்மாளிடம் முறையிட்டாள். உடனே இராணி சேவகர்களை அனுப்பி, தன் தம்பியைச் சிறை செய்து வரும்படி உத்தரவிட்டாள். பின்பு அவனை நியாய சபையில் நிறுத்தி விசாரணை செய்து, சிறையில் அடைத்தாள். குற்றம் செய்தவன் தன் தம்பியாயினும் இராணி தண்டனையிட்டாளல்லவா? அவளது குணத்தைச் சகல ஜனங்களும் மெச்சி அவளை வாழ்த்தினார்கள்.

அவ்வளவு மேன்மையான இராணியை நாம் இன்றும் பெருமையாகக் கொண்டாடுகிறோம்.

---

# 15. சிவாஜி

(ஒரு பாடசாலைப் பிள்ளை தன் நண்பனுக்கு எழுதிய கடிதம்.)

புனா,

ரக்தாக்ஷி௵ சித்திரை௴ 10௳.

என் அன்புமிகுந்த நண்பனுக்கு,

நாங்கள் இந்த ஊரில் ஒரு மாதமாகத் தங்கியிருக்கிறோம். சென்ற வெள்ளிக்கிழமை இங்கு ஓர் உற்சவம் நடந்தது. அந்த உற்சவத்தைப்பற்றி இக்கடிதத்தில் வர்

ணித்து எழுதுகிறேன். இதை நமது அருமையான உபாத்தியாயருக்கும் மற்றும் உனது வகுப்பு நண்பர்களுக்கும் படித்துக் காட்டவும்.

அன்று, சிவாஜி பிறந்த நாளாகும். மகாராஷ்டிர வீரசிங்கமாகிய சிவாஜியை அறியாதார் புவியில் ஒருவருமில்லை. சிறு குழந்தையும் அவரைப்பற்றிப் பல கதைகள் சொல்லும். அவர் பிறந்த தினத்தை உற்சவமாகக் கொண்டாடுவதால், அவரது குணங்கள் நமது மனதில் எப்போதும் பதிந்திருக்கும்; நமக்குப் புருஷவீரமும், தைரியபுத்தியும் உண்டாகும். இந்த ஊரில் எல்லா மாணவர்களும் அதிகாலையில் எழுந்து வீடுவீடாகச்சென்று நெய், கோதுமை, பருப்பு முதலிய தானியங்கள் சேகரித்து வந்தார்கள். பெரிய சத்திரத்தில் அவைகளைச் சமைத்து அநேகருக்குப் போஜனம் தயார் செய்தார்கள். காலை 9-மணிக்கு, சிவாஜியின்



படத்தை அழகிய ரதத்தின்மேலேற்றி மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். அடே யப்பா! எவ்வளவு கூட்டம்! தெருவில் எள் போட்டாலும் கீழே விழாது எனும்படி அவ்வளவு ஜனங்கள் நெருக்கமாக இருந்தனர். அநேகவீட்டார் உண்டிப்பெட்டியில் பணம் போட்டார்கள். பலர் கோஷ்டியாக இருந்து பஜனை செய்துகொண்டு சென்றனர். பகலில் இரண்டு மூன்று இடங்களில் சமாராதனையும் நடந்து பல நூறு ஜனங்கள் சாப்பிட்டார்கள்.

பள்ளிக்கூடங்களுக்கு அன்றையதினம் விடுமுறைவிடப்பட்டது. மாலை நான்கு மணிக்கு அப்பிள்ளைகளின் வல்லமை முதலியவைகளை அறியப் பலவிதப் போட்டிப் பந்தயங்கள் நடந்தன. கடைசியில் சுமார் நூறு பிள்ளைகள் பரிசு பெற்றார்கள். பின்பு, மூன்று இடங்களில் காலக்ஷேபங்கள் நடந்தன. சிவாஜி மகாராஜாவின் சரித்திரத்தைப் பாட்டுக்களுடன் கதாப் பிரசங்கம் செய்தார்கள். நான் ஓரிடத்தில் இருந்து அக்கதையைக் கேட்டேன். அவர்கள் பாஷை எனக்குத் தெரியாது. ஆனாலும் பொதுவாகக் கதைக் கருத்து விளங்கியது. மேலும், கேட்கும் ஜனங்கள் அடிக்கடி சிரித்தும், அழுதும், ஆரவாரம் செய்தும் கதைப் பயனை அனுபவித்ததைப் பார்த்து, நானும் அப்படியே செய்தேன்.

ஒரு சமயம் சிவாஜி சைன்னியத்திற்கு ஆள் சேகரித்தார். "யார் என்னுடன் வருகிறீர்கள்?" என்று சிவாஜி கேட்டது போலக் கதை சொல்லுபவர் வெகு ரசமாக வர்ணித்தார்.

உடனே அங்கிருந்த ஜனங்களில் பலர் "நான் நான்" என்று எழுந்தார்கள். ஹிந்துக்களுக்குச் சுயாதீனமும் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளுந் தைரியமும் உண்டாக வேண்டுமென்று சிவாஜி உழைத்தார்.

ஹிந்துமத தர்மத்தை நிலைநிறுத்தப் பாடுபட்ட சிவாஜியை, மொகலாயச் சக்கரவர்த்தியாகிய ஔரங்கஜீப் எப்படியாவது ஒழிக்கவேண்டுமென்று வெகு சிரமப்பட்டார். ஆனால் சிவாஜியோ, கொஞ்சங் கொஞ்சமாகத் தம் பலத்தை விருத்தி செய்துவந்தார். பல மலைக்கோட்டைகளைத் தந்திரமாகப் பிடித்து மகாராஷ்டிர தேசம் முழுதும் தம் வசப்படுத்திக் கொண்டார். மகமதிய சேனைகளை நேரில் ஒரே தாக்காக எதிர்த்து யுத்தம் செய்தால், தம் சைன்

னியம் நாசமாகிவிடும் என்பது அவருக்குத் தெரியும். ஆகையால், வெகு தந்திரமாக மகமதிய சேனு வீரர்களைப் பயமுறுத்தி விரட்டினுர். டில்லிக்குச் சென்று மொகலாயச் சக்கரவர்த்திக்குச் சமமாக வீற்றிருந்தார். ஆயினும் ஔரங்கஜீப் இவரை ஏமாற்றிச் சிறையில் வைத்தனர். சிவாஜியோ பழங்கள் அனுப்பும் கூடையில் ஒளிந்து கொண்டு டில்லியிலிருந்து தப்பித்து வந்தார். பின்பு புனுவில் தமது அன்பர்களை யெல்லாம் ஒன்றுகூட்டி மகா ராஷ்டிர இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினுர். அவர்கள் சக்கர வர்த்தி யென சிவாஜிக்கு முடி சூட்டினுர்கள். சில வருஷங் களுக்குப் பின், 1680-ஆம் வருஷம் சிவாஜி இறந்துபோனுர்.

சிவாஜி தம் சொந்த வன்மையினுலும் சாமர்த்தியத்தி னுலும் ஒரு பெரிய இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தார். அவரு டைய தீரமும் சமயோசித யுக்தி புத்தியும் வர்ணிக்கமுடி யாதவை. ஒவ்வொரு நாளும் தம் தாயாரை வணங்கி நமஸ் கரித்து ஒவ்வொரு விஷயத்திலும் அவரது புத்திமதியைக் கேட்டு நடந்தனர். அவர் காலத்திலேயே சிவாஜி என்ற பெயர் இந்தியா முழுதும் பரவும்படி செய்துவிட்டார். அக்காலத்தில் ஓர் ஊரில் சண்டைசெய்பவர் ஜனங்களைத் தாக்கி அவ்வூரைக் கைப்பற்றுவார்கள். இப்போதுங்கூட ஐரோப்பிய யுத்தம் நடந்தபோது அவ்வாறே பட்டணங்கள் தாக்கப் பெற்று அழிவடைந்தன. அதுபோலவே சிவாஜி யும் மகாராஷ்டிர வீரர்களும் சுமார் முந்நூறு வருஷங் களுக்கு முன் கிராமங்களைத் தாக்கிக் கொள்ளையிட்டார்கள். ஆனுல் சிவாஜி, ஸ்திரீகளைக் கொல்லக் கூடாதென்றும், மசூதி கோயில் இவைகளைக் கொள்ளையிடக்கூடாதென்றும், தம் வீரர்களுக்குக் கண்டிப்பான உத்தரவு செய்திருந்தார். அக்காலத்தில் ஹிந்துக்கள் நசித்துப் போகாமல் செழித்து ஓங்கும் பொருட்டு அவதரித்த மகாபுருஷர் சிவாஜி.

கதை சொல்லும் பொழுதே, பிள்ளைகளைப் பார்த்து, கதாப் பிரசங்கியார் அடிக்கடி சிவாஜியின் குணங்களைக் கிரகித்து நீங்களும் அவர்போலக் கியாதிபெற்று இருக்க வேண்டுமென்று சொல்லி வந்தார். அவர் சொன்னது என் மனதில் நன்கு பதிந்தது. சிவாஜியைப்போல ஒவ்வொரு பிள்ளையும் திடகாத்திரமும், மனோதைரியமும் பெற்றால் நமது தேசத்திற்கு எவ்வளவு நன்மை யுண்டாகும். நாம் ஒவ்வொருவரும் தேகபலம் பெறுவதற்குப் பாடுபட வேண்டும். புத்திபலம் பெறுவதுடன் தேகபலமும் அடைய வேண்டும்.

அன்றிரவு இரண்டு மூன்று இடங்களில் சிவாஜி சரித்திரத்தை நாடகமாக நடித்துக் காட்டினார்கள். பாஷை நன்கு தெரியாவிடினும் எனக்கு உண்டான உற்சாகம் அதிகம். ஆஹா! சிவாஜி இறந்து பல வருஷங்களாயினும் அவரைப்பற்றி நாம் மிகவும் கொண்டாடுகிறோம்.

உன்னைப்போல நானும் இன்னும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவனாகவே இருக்கிறேன். நீ இப்போது படித்து வரும் சிறிய பாடசாலையை, நான் விட்டு நான்கு வருஷங்களாயின. ஆயினும், அப்பாடசாலையில் முன் போலவேதான் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நம்புகிறேன். ஆகா! நாம் பெரியவர்களான பின் நம்மில் யாரேனும் சிவாஜியைப் போன்ற பெயரும் புகழும் பெற்று வசிப்பார்களா என்று அடிக்கடி எனக்கு யோசனை உண்டாகிறது. உன் வகுப்பில் எவனாவது இருக்கிறானா? ஏன்! ஒரு வேளை நீயே பெரியவனாகியபின் அவ்விதக் கீர்த்தி பெறலாம். ஆமாம்! நாம் ஒவ்வொருவரும் அவ்விதமான பேர் ஏன் பெறக்கூடாது? அதை அடைய நாம் முயலவேண்டும்.

இப்படிக்கு,
உன் அன்பார்ந்த நண்பன்.



# 16. முத்துசாமி ஐயர்

சென்னப்பட்டணத்தில் உள்ள பெரிய நீதி ஸ்தலத்தில் (ஹைகோர்ட்டில்) ஸ்ரீமான் முத்துசாமி ஐயரது சிலை உருவம் வைக்கப்பட்டிருக்கிறது. ஓரிடத்தில் படம் அல்லது சிலை உருவம் வைத்துப் பெருமைப் படுத்தப் படத்தக்கவர் எல்லோராலும் பூஜிக்கப்படுதற்குரியவரா யிருக்கவேண்டும்.

ஸ்ரீமான் முத்துசாமி ஐயர் சென்னை நீதிஸ்தலத்தில்



முதல் நியாயாதிபதியாக உத்தியோகம் வகித்து இருந்தார். சமீப காலங்களில் அவ்வளவு உன்னத பதவி பெற்றவர்களில் அவரே முதன்மையானவர். நீங்கள் இதுவரையில் புகழ் பெற்ற ராஜாக்கள், யுத்த வீரர்கள், கவிஞர்கள் இவர்களைப்பற்றிப் படித்தீர்கள். இப் பாடத்தில், சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஸ்ரீமான் முத்துசாமி ஐயர் மிகப்பெரும் பெயரும் புகழும் பெற்ற விதத்தைப்பற்றி அறிவீர்கள்.

திருவாரூருக்குச் சமீபம் உள்ள உச்சுவாடி கிராமத்தில் 1832-ஆம் வருஷம் ஸ்ரீமான் முத்துசாமி ஐயர் பிறந்தார். இளவயதிலேயே பிதா இறந்து விட்டபடியால் முத்துசாமியையும் அவர் தமயனையும் அவர் தாயார் திருவாரூருக்கு அழைத்துவந்தார். முத்துசாமி சிறுபிள்ளையா யிருந்த போதே ஜீவனத்திற்குக் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. ஒரு கணக்கரிடம் மாதம் ஒரு ரூபாய் சம்பளத்திற்கு வேலை செய்தார். சில வருஷங்களுக்குப் பின் தாயாரும் இறந்து விடவே, முத்துசாமி அநாதைப் பிள்ளையாகத் தம் சுயபுத்தியினாலும் சாமர்த்தியத்தினாலும் ஜீவனம் செய்து வந்தார். ஒரு சமயம் அவ்வூர்த் தாசில்தார் முத்துசாமியின் சாமர்த்தியத்தையும் நற்குணத்தையும் கண்டு அப்பிள்ளையை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணினார். அவர் வாக்குச் செலவால், முத்துசாமி நாகப்பட்டணம் கிறிஸ்தவ மிஷன் பாடசாலையில் சேர்ந்து படித்தார். இரண்டொருவர் அவருக்குத் தினந்தோறும் முறையாக தரும உணவு அளித்தார்கள். பாடசாலையில் நன்றாகப் படித்துத் தேறியபின், முத்துசாமி சென்னைக்குச் சென்றார். அவரது பழைய உபகாரியான தாசில் நாயகர் முத்துசாமியின் குணத்தைப்பற்றிச் சென்னை சர்க்கார் பாடசாலைத் தலைவருக்கு எழுதியிருந்தார். முத்துசாமியும் அப்பாடசாலையில் சேர்ந்து மிகவும் ஊக்கமாக உழைத்துப் பரீக்ஷைகளில் சிறந்து தேறினார். இவர் எழுதிய ஒரு வியாசத்தை மெச்சி, பவல் துரை இவருக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு அளித்தார்.

பரீக்ஷையில் தேறியபின், அந்தப் பாடசாலையிலேயே ஓர் உபாத்தியாயராகச் சிலகாலம் இருந்தார். பிறகு, தஞ்சை கலெக்டர் ஆபீசில் குமாஸ்தாவாகக் கொஞ்சகாலம் அமர்ந்து அலுவல் பார்த்தார். இராஜாங்கத்தார் முத்து

சாமி ஐயரது வேலைத்திறமையை மெச்சி, இவரைத் தரங்கம் பாடியில் ஜில்லா முன்சீப்பாக நியமித்தார்கள். அப்பொழுது ஏற்பட்ட சட்டப் பரீக்ஷையில் முத்துசாமி ஐயர் தேறினார். பின்பு, தஞ்சாவூரில் டிப்டி கலெக்டராகச் சில வருஷங்கள் உத்தியோகம் செய்தார். அக்காலத்தில் மிகவும் புகழ் பெற்ற நார்டன் என்னும் ஆங்கில பாரிஸ்டர் நமது முத்துசாமி ஐயரின் விவேகத்தையும் நிர்வாக சாதுரி யத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டார். முத்துசாமி ஐயரின் பெருமை சென்னைக் கவர்னருக்கும் அறிவிக்கப் பட்டது. காலக்கிரமத்தில் பதவியில் உயர்ந்து, கடைசியில் சென்னை பெரிய நீதிஸ்தலத்தில் நியாயாதிபதியாக முத்து சாமி ஐயர் நியமிக்கப்பட்டார். அவ்வளவு உயர்ந்தவேலையை அதுவரையில் இங்கிலீஷ்காரரே வகித்து வந்தனர். ஆனால், முத்துசாமி ஐயர் தாம் உத்தியோகம் வகித்த நாள் முதல், காட்டின திறமையைக்கண்டு இங்கிலீஷ்காரர் மகிழ்ந்தனர். எந்த உயர்ந்த உத்தியோகமும் இந்திய ஜனங்களால் திறமை யாக வகிக்க முடியும் என்பது இவரால் விளங்கியது.

ஹிந்து மதத்தினர் முறைகளையும் சட்டத்தையும் முத்துசாமி ஐயர் நன்றாகப் பரிசீலனை செய்து புகழ்பெற்றார். எவ்விதச் சந்தேகம் ஏற்படினும் அவருக்கே மனுச்செய்து கொள்வது வழக்கமாயிற்று. முத்துசாமி ஐயர் சொல்லே சட்டம் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டனர். இராஜாங்கத்தாரும் முத்துசாமி ஐயருக்கு "ஸர்" என்ற பட்டம் அளித்துக் கௌரவித்தார்கள்.



தமது 63-ஆவது வயதில் 1895-ஆம் வருஷம் முத்து சாமி ஐயர் இறந்து போயினர். அவரது குணங்களைக் குறித்துப் பல சிறு கதைகள் வழங்குகின்றன. ஒரு சமயம்

ஸியாயாதிபதியாகிய முத்துசாமி ஐயரைப்பார்க்கவந்த ஒரு கனவான், அவரது சாதாரண உடையைக்கண்டு, அவரை யாரோ என்று எண்ணி நெடுநேரம் சாதாரணமாய்ப் பேசிக் கொண்டிருந்தாராம், இப்போதும் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு உதாரணம் காண்பிப்பதற்கு முத்துசாமி ஐயர் பெயரையே எடுத்துச் சொல்லுவார்கள்.

---

## 17. பீஷ்மர்

வட இந்தியாவில் டில்லி என்கிற ஒரு பட்டணம் உள்ளது. முன்காலத்தில் அதன் சமீபத்தில் ஹஸ்தினாபுரம் என்ற ஓர் ஊர் இருந்தது. அதில் சந்தனு என்ற அரசர் ஒருவர் இருந்தார். அவருக்குக் காங்கேயர் என்ற ஒரு பிள்ளை உண்டு. காங்கேயரைத் தாயார் சிறுவயதிலேயே விட்டுப் பிரிந்ததால் காங்கேயர் தம் பிதாவுடன் வாழ்ந்து வந்தார்.

சந்தனு ஓர் அழகான பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்பட்டார். ஆனால், அப்பெண்ணின் பிதா முதலில் சம்மதிக்கவில்லை; "காங்கேயர் முதல் பிள்ளையானதினால் அவரே பிற்பாடு அரசராவார். என் மகளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கு அரசனாகும் பாக்கியம் ஏது?" என்று கூறிப் பெண் கொடுக்க மறுத்தார். சந்தனுராஜா செய்வது தோன்றாமல் வருத்தப்பட்டார்.

இதையறிந்த காங்கேயர், தம் பிதாவிற்குச் சந்தோஷம் உண்டாக்க வேண்டும் என்று ஆசைகொண்டார். உடனே அப்பெண்ணின் பிதாவிடம் சென்று, "எனக்கு இராஜ்ஜியம் வேண்டியதில்லை. ஆனால் ஒருவேளை எனக்குப் பிள்ளை

பிறந்தால், தனக்கு இராஜ்ஜியம் வேண்டுமென்று சண்டை செய்யலாம். ஆதலால் நான் கலியாணமே செய்துகொள்வதில்லை. இது சத்தியம்'' என்று கூறினார். அப்பெண்ணின் பிதாவும் சந்தோஷித்துத் தம் மகளைச் சந்தனுராஜாவுக்கு விவாகம் செய்துகொடுத்தார்.

தம் பிதாவின் சுகத்தை விரும்பிக் காங்கேயர் எவ்வளவு உத்தமமான விரதம் ஏற்றுக்கொண்டார் பாருங்கள்! இதனால் அவர் பீஷ்மர் என்ற பெயர் பெற்றார். சகல ஜனங்களும் அவரது குணத்தைப் புகழ்ந்தார்கள்.

பீஷ்மர் பிரமசாரியாகவே பல வருஷங்கள் ஜீவித்திருந்தார். அவருக்கு இரண்டு தம்பிகள் பிறந்தார்கள். பிதா இறந்து போன பின்பு, சிறு தம்பியரைப் பீஷ்மர் வளர்த்து வந்து, அவர்களுக்கு விவாகமும் செய்வித்தார். ஆயினும், அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாகவில்லை. அதனால் வம்சம் நாசமாகிவிடும்போலிருந்தது. அப்போது பீஷ்மரின் சிற்றன்னை, அவரை விவாகம் செய்துகொள்ளும்படி மிகவும் வேண்டினார். ஆனால் பீஷ்மரோ மறுத்துவிட்டார். ''சூரியனது ஒளி குறைந்தாலும், பூவிற்குரிய மணம் மாறினாலும், நான் என் சத்திய விரதத்தினின்றும் பிசகமாட்டேன்'' என்று சொன்னார்.

பீஷ்மரைப்பற்றி மகா பாரதம் என்னும் நூலில் விவரமாகப் படிக்கலாம்.

---

# 18. இராஜராஜச் சோழர்

ஒரு காலத்தில் தஞ்சாவூர் நகரத்தில் ஒருநாள் நடந்த ஒரு பெரிய உற்சவத்தில் நிகழ்ந்த விஷயங்களை நாமும் அருகில் இருந்து பார்த்ததாகப் பாவித்துக்கொண்டு இதைப் படிப்போம்.

அரண்மனையில் மகாராஜா கொலுவிருந்து எல்லோருக்கும் பலவிதச் சன்மானம் செய்யப்போவதாக நேற்றே பறை யறைவிக்கப்பட்டிருந்தது. ஆகவே, நாமும் இன்று அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து, சொற்ப போஜனம் உண்டு புறப்பட்டு வந்தோம். தெருவில் இதற்குள்ளாக எவ்வளவு ஜனங்கள் கூடிவிட்டன பார்! வெளியூர்களிலிருந்து அநேக ராஜாக்கள் வந்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பல நூறு வீரர்களுடன் வந்திருக்கிறார்கள். இதோ இந்த முத்துப் பல்லக்கில் செல்பவன் மதுரையை ஆளும் பாண்டிய ராஜன். அதோ அழகிய பட்டும் சரிகைகளும் போடப்பட்ட குதிரை மீது செல்லும் வீரன் காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவ ராஜன். அதோ அந்த உயர்ந்த யானைமீது வீற்றிருப்பவன் சேர மகா ராஜன். அதற்கப்பால் அழகான ரதத்தில் செல்பவன் ஈழமண்டலத்து அரசன். இக்காட்சி என் கண்களாற் பார்க்க முடியவில்லை. அப்பப்பா என்ன கூட்டம்! யுத்தவீரர்கள் அணி யணியாகப் போகிறார்கள். யானைகள் ஒய்யாரமாக நடந்து போகின்றன. நாம் இக்கூட்டத்தை எவ்வாறு கடந்து அரண்மனைக்குச் செல்வது?

நல்லவேளை? இதோ நமது நண்பன் விமலாதித்தியன் ஒரு அழகிய ரதத்தில் வருகிறான். அவன் முதல் மந்திரியின் புதல்வனாதலின் அவனுடன் நாமும் தடையின்றிச் செல்லலாம். அதிர்ஷ்டவசமாகவே அவனும் நம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறான். நாமும் இரதத்தில் ஏறிக்கொண்டு அரண்மனைக்குள்ளே செல்வோம்.

ஆகா! இதுதான் கொலுவீற்றிருக்கும் மண்டபம். விசாலமான இம்மண்டபத்தின் நடுவில் முற்றம்போலத் திறந்த வெளி யிருக்கிறது. நான்கு புறங்களிலும் தாழ்வாரத்தில் பற்பல ஆசனங்கள் வரிசையாக இருக்கின்றன. மண்டபத்தின் ஒருபுறம் உயர்ந்த மேடையும மற்ற முப்புறங்களி

னும் படிக்கட்டுகளுமிருக்கின்றன. தரை முழுவதும் அழகிய சரிகைப் பட்டுத்துணிகள் விரிக்கப்பட்டுள்ளன. மேடையின்மீது ஒளிவீசும் தங்கமயமான சிம்மாசனம் இருக்கிறது. அதில் சிங்கம் செதுக்கப்பட்டு ஆங்காங்கு வைரக் கற்களும் வைத்து இழைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆசனத்தின்முன் பலவகையான பொருள்கள் போர்போராகக் குவிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு புறத்தில் ஏராளமான யானைத் தந்தங்களும், அழகிய புலித்தோல்களும், மான்தோல்களும் கிடக்கின்றன. இன்னொரு புறம் அழகிய நல்ல முத்துக்களும், சிகப்புக் கற்களும் குவிக்கப்பட்டிருக்கின்றன. ஓரிடத்தில் பச்சைக் கற்களும் வைரக்கற்களும் பதிக்கப் பெற்ற தோகைகளை உடைய இரண்டு தங்க மயில்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கண்ணைப் பறிக்கின்றன. மற்றோரிடத்தில் ஓரழகிய தந்தப்பல்லக்கு இருக்கிறது. அதோ! அவ்விடத்தில் ஏராளமான பட்டுத்துணிகளும், சரிகைகளும், ரத்ன ஆபரணங்களும் குவிந்து கிடக்கின்றன.

இதோ! வாத்திய ஒலி கேட்கிறது. அதோ! வெளியூர் இராஜாக்கள் வாசலிற் புகுந்து மண்டபத்தினுள் கூட்டங் கூட்டமாக நுழைந்து வருகின்றனர். உத்தியோகஸ்தர்கள் அவர்களை எதிர்கொண்டு அழைத்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்கிறார்கள் தங்களுக்கு அமைந்த முறைப்படி அரசர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். சாதாரண வீரர்களும் சிப்பந்திகளும் வெளியே நின்றுவிட்டார்கள். அதோ உட்கார்ந்திருப்பவர் அரண்மனைப் புரோகிதர். அவர் அருகே, இன்னும் பல பிராமணோத்தமர்கள் இருக்கிறார்கள். அங்கே சிலர் பட்டுத் துணியில் புத்தகங்கள்போலக் கட்டி வைத்துக் கொண்டு இருக்கின்றவர்கள் பண்டிதர்கள். இதோ வந்துவிட்டார் முதல் மந்திரி. அவர் சமிக்ஞை செய்ததும், வாத்தியங்கள் முழங்குகின்றன. சபையோர்கள் ஒருமிக்க

எழுந்து நிற்க, அதோ மகாராஜா படியேறி ஆசனத்தில் உட்காருகிறார். சகல ஜனங்களும் அரசரை வாழ்த்துகின்றனர். முதல் மந்திரி எழுந்து நின்றவுடன் சபையோர் சத்தமில்லாமல் அமைதியா யிருக்கிறார்கள்.

"மகா ராஜாதிராஜ மகாராஜ பரமேஸ்வரர் நீடூழிவாழ்க! நமது அரசர் திக்குவிஜயம் செய்து வந்த பிறகு, பல சிற்றரசர்கள் கொடுத்துள்ள கப்பத்தையும் பொருள்களையும் சகல ஜனங்களும் பார்த்து ஆனந்திக்கும் பொருட்டு இன்று சபை கூட்டியிருக்கிறார்" என்று முதல் மந்திரி அறிவித்தார். பின்பு, ஒருவர் எழுந்து, ஒரு பெரிய கட்டு ஓலையைப் புரட்டி, ஒன்றொன்றாக வாசித்துக் கொண்டிருக்க, வேறொருவர் சாமான்களின் குவியல் நடுவே சென்று, சில சாமான்களைச் சுட்டிக்காட்டுவதும், சிலவற்றைக்கையில் எடுத்துச்சபையோர்களுக்குக்காட்டுவதுமாக இருந்தார். அப்பப்பா! அசாத்தியமா யிருக்கிறது! என்ன பட்டி இது! "இதோ இந்த தந்தப்பல்லக்கு ஈழமண்டலத்து அரசன் கொடுத்தது. இச் சிவப்புக்கற்கள் கடாரத்து அரசன் அனுப்பியது. இந்தப் பட்டுகள் பாண்டியன் அனுப்பியவை. இந்தத் தங்க மயிற் பதுமைகள் சேர ராஜன் அனுப்பியவை........." சரி! இன்று முடிய வாசிப்பார் போலிருக்கிறது. நாம் மெதுவாக அரண்மனையைச் சுற்றிப்பார்த்து வருவோம். எழுந்திரு; போகலாம். வழி எங்கும் கூட்டமாயிருக்கிறது. விமலாதித்தியனது உதவியினால் பக்கத்தில் உள்ள சுரங்கத்தின் வழியே வெளியே செல்வோம். "நண்ப விமலா



தித்த! அங்கு, சற்று தூரத்துக்கப்பால், ஏராளமான பாறுங் கற்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றனவே! அவையும் யாரேனும் அரசர் அனுப்பிய கப்பமோ!'' "ஆமாம், இவற்றை மண்டபத்திற்குள் அடுக்க முடியுமா'' என்று விமலாதித்தியன் சிரித்தான். அக்கற்களை ஆயிரக்கணக் கான ஆட்கள் உட்கார்ந்து வெட்டிக்கொண்டு இருந்தனர். இவ்வளவு கற்களை என்ன செய்யப்போகிறார்களென்று நான் யோசித்துக்கொண்டே நின்றேன். இவ்விதமாக அங்கும் இங்கும் உலவும்போது கணீர்கணீர் என்று மணிச் சத்தம் கேட்டது. உடனே விமலாதித்தியன், "அதோ அரசர் எழுந்து பேசப்போகிறார். வாருங்கள் போகலாம்'' என்று நடந்தான். நாங்களும் அவனுடன் அரண்மனைக் குள் நுழைந்து முன்னிருந்தவிடத்தை அடைந்தோம்.

எங்கும் அமைதியாயிருந்தது. சோழ மகாராஜர் எழுந்து பேசுகிறார். "இன்று யாவரும் கூடியது பற்றி வெகு சந்தோஷமடைந்தேன். இவ்வளவு வருஷங்களாக வெளி நாடுகளுக்குச் சென்று சண்டைகளில் ஜயித்து அநேக ராஜாக்களைத் தோற்கடித்துத் திரும்பவும் கடவுளின் அரு ளால் நமது நாட்டிற்கு வந்து சேர்ந்தேன். என்னிடம் தோல்வி யடைந்த ராஜாக்கள் பலர். மேற்கே கடல் வரையிலும், தெற்கே ஈழ* தேசமும், வடக்கே கங்காநதி வரையிலும், கிழக்கே கடலைத் தாண்டிக் கடாரமும்† சென்று ஜயித்தேன். ஆங்காங்கு உள்ள அரசரிடமிருந்து நான் ஏராளமான பொருளையும், தனதானியங்களையும், யானை குதிரைகளையும் கைப்பற்றி வந்தேன். சோழ தேசத்தின் பெருமையும் அதன் உயர்ந்த நிலைமையும் என்றும் அழியா மல் பல்லாயிரம் ஆண்டுகள் ஜனங்கள் சொல்லிக் கொண்

---

* யாழ்ப்பாணம் † பர்மா

டிருக்கும்படி என்ன செய்யலாம் என்றும் யோசித்தேன். கடைசியாக, வெகு மேன்மையான ஒரு கோவில் கட்டலாம் எனத் தீர்மானித்து இருக்கிறேன். நமது இராஜ்ஜியத்தின் மகிமை எவ்விதம் உயர்ந்ததோ அதுபோல, அக்கோவிலின் கோபுரமும், ஆகாயத்தை யளாவி எவ்விடத்திலும் இவ்வளவு உன்னதமான கோபுரம் இல்லை என்னும்படி, இருக்கவேண்டும். நமது நண்பர்களாகிய பல அரசர்களும், என் பிரஜைகளும், உத்தியோகஸ்தர்களும் இக்காரியத்தில் ஊக்கம் எடுத்துக்கொண்டு இதை சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.''



இவ்வாறு அரசர் பேசி உட்கார்ந்தார். பாருங்கற்கள் குவித்திருப்பதின் காரணம் அறிந்து ஆச்சரிய மடைந்தோம். அரசர்கள் ஒவ்வொருவரும் தாம் தாம் இன்னின்ன அனுப்புவதாக வாக்களித்தார்கள். பிறகு சோழ சக்கரவர்த்தியின் கீர்த்திப் பிரதாபத்தையும் அவரது வெற்றிகளையும்பற்றிச் சிலர் பாடல்களும், சுலோகங்களும் படித்தனர். சந்திர சூரியர் உள்ள வரையில் இராஜராஜச் சோழரின் கீர்த்தி

அழியாமலிருக்கட்டும் என ஆசீர்வதித்தனர். 'சபை முடிந்தது!' என முதல் மந்திரி சொல்ல, அரசரும் எழுந்து செல்கிறார். மத்தியில் கொட்டி யிருந்த பொருள்களைப் பல வீரர்கள் காவல்புரிகின்றனர். இரும்புக் கம்பிகளால் காக்கப் பட்டுள்ள அப்பொருள்களை ஜனங்கள் எல்லோரும் திரள் திரளாக வந்து பார்த்து மகிழ்கின்றனர்.

நாமும் கூட்டத்தில் போனால் கஷ்டம் அதிகமாகும். ஆகையால் முன்போலவே பக்கத்துச் சிறு கதவு வழியாக நுழைந்து வீடுபோய்ச் சேர்வோம்.

## 19. பிரதாபசிங்

இந்தியா படத்தில் இராஜபுதனம் எங்குள்ளது? பார். இந்த மாகாணத்தில் பல சிறிய இராஜபுத்திர இராஜ்ஜியங்கள் உள. முற்காலத்தில் வட இந்தியா முழுதும் பல இராஜ புத்திர அரசர்கள் அரசாட்சி செய்திருந்தார்கள். ஆனால் மகமதியர்கள் வந்து அவர்களுடன் அடிக்கடி சண்டை செய்து வெற்றி பெற்று வந்ததால், இராஜபுத்திரர்கள் தங்கள் இராஜ்ஜியங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக இழந்தனர். இப்போதுள்ள பாகம்தான் அவர்களுக்கு மிஞ்சியது.

இவ்வாறு மகமதியர்களுடன் எதிர்த்து நின்றவர்க ளுள் பிரதாபசிங் என்பவர் முக்கியமானவர். அக்காலத்தில் டில்லியில் சக்கரவர்த்தியா யிருந்தவர் அக்பர். இராஜபுத்திரர் கள் அனைவரும் தமக் கடங்கி யிருக்கவேண்டுமென்று அவர் பாடுபட்டார். அவ்வாறே எல்லா இராஜபுத்திர மன்னர்களும் அக்பருக்கடங்கி அவரைச் சக்கரவர்த்தியாக ஒப்புக்கொண் டனர். பெருந்தன்மையும் சாமர்த்தியமும் வாய்ந்த அக்பர் அவர்களை வெகுவாகக் கௌரவித்து அவர்களுக்கு

உயர்ந்த பதவிகளையும் அளித்தார். ஆனால், மீவார் தேசத்து ராஜ வாகிய பிரதாபசிங் மாத்திரம் தம் சுயாதீனத்தை இழந்துவிட மனம் ஒப்பாதவராய் எதிர்த்து நின்றார்.

அக்பரது சைனியங்கள் மீவார் நாட்டைக் கைப் பற்றின. பிரதாபசிங் தமக்கு உற்ற சில நண்பர்களுடன் காட்டிற்கு ஓடிவிட்டார். காட்டில் முழு உரிமையுடன் இராஜ்ஜியம் நடத்துவது போலவே சந்தோஷமாக வசித்து வந்தார். காய் கனிகளையும், வேட்டையாடிக் கொண்டு வரும் மாமிசத்தையும் புசித்தார். மரத்தடியிலும் கற் பாறைமீதும் நித்திரை செய்தார். அவர் இவ்விதமாகக் காலங்கழிக்கும்போதும், அவர் மனைவி மக்களும் அவர் கூட வசித்தார்கள். இவ்வளவு கஷ்ட திசையில் இருந்த போதும், அரசன்பால் ஆழ்ந்த அன்புடைய சில வீரர்களும் அவருடனே அவருக்கு உதவியாகக் காட்டில் வசித்தனர். அக்பர் எப்படியாவது அந்தப் பிரதாபசிங்கை வணங்கச் செய்யவேண்டுமென்று விரதம்கொண்டு தம் சேனைகளை அனுப்பிக்கொண்டே இருந்தார். ஓரிடத்திலிருந்து இன்னொ ரிடத்திற்குப் பிரதாபரும் ஓடிக்கொண்டே யிருக்கும்படி நேர்ந்தது. ஆயினும், பிரதாபசிங் கொஞ்சமேனும் மனோ சஞ்சலமடையவில்லை. அவருக்கு மகா உன்னத பதவி அளிப்பதாக, அக்பர் அநேக முறை அவருக்கு ஆசைகாட்டி, அவர் தம்மிடம் வரும்படி செய்தி அனுப்பினர். பிரதாப ருடைய நெருங்கிய பந்துக்களில் அநேகர் அக்பரிடம் மந்தி ரிகளாகவும் சேனாதிபதிகளாகவும் இருந்தனர். பிரதாபரின் சகோதரர் ஒருவர், சக்கரவர்த்தி மகனாகிய சலிம் சேனையில் ஓர் அதிபதியாக இருந்தார். பிரதாபரோ இந்த ஆசையை வெறுத்துத் தம் பிடிவாதத்திலேயே இருந்தார். ஒரு சம யம், அவருடைய பெண்டு பிள்ளைகள் உணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், அவருடைய சிறிய மகன் கையில் வைத்

திருந்த அப்பத்துண்டை ஒரு காட்டுப்பூனை வெடுக்கென்று பிடுங்கிச் சென்றது. அக்குழந்தை வீறிட்டுக்கதறியது. அப்போது அவ்விடத்தில் வேறு எவ்வித உணவும் கிடைக்காமல் போகவே பிரதாபரும், "இது என்ன ஜன்மம்" என்று வருந்தினர். "சக்கரவர்த்திக்கு இணங்கிச் சுகமாக நாட்டில் இருக்கலாமே" என்று அவர் பெரிய பிள்ளையும் எண்ணினன். அன்று அக்குழந்தை பட்டினியாகவே யிருந்தது.

"இன்னொரு சமயம், சலிம் சைனியத்துடன் இவர் ஒரு பெரிய சண்டை செய்ய நேர்ந்தது. பிரதாபருடைய கீர்த்தியை அறிந்தசில இராஜபுத்திரர்கள் இவருக்கு உதவியாக இவர் கட்சியில் சேர்ந்தனர். ஆயினும், பிரதாபர் சைனியம் தோல்வியடைந்தது. மகா தீரத்துடன் இராஜபுத்திரர்கள் சண்டை செய்தாலும், சலிம் சைனியம் பெரியதானதாலும், அதிலும் இராஜபுத்திரவீரர்கள் இருந்து சண்டை செய்தபடியாலும், பிரதாபர் ஓடும்படியாயிற்று. யுத்தக்களத்திலிருந்து பிரதாபர் ஒருவராக உயிர் தப்பித் திரும்பித் தம் குதிரையை வேகமாக விரட்டிக்கொண்டு சென்றார். சலிம் சேனை வீரர்கள் அவரைத் துரத்திக்கொண்டு நெடுந்தூரம் ஓடி, ஒருவர் பின் ஒருவராக நின்றுவிட்டார்கள். ஆனல் ஒரே குதிரை வீரன் பிரதாபரை விடாமல் துரத்திச் சென்றான். இருவருக்கும் இடைய்யுள்ள தூரம் வரவரக் குறைந்தது. அன்று முழுதும் வெகு சிரமப்பட்ட பிரதாபரது குதிரை களைப்பினல் திடீரென்று விழுந்து இறந்தது. தமது அரிய குதிரை இறந்ததைக்கண்டு பிரதாபரும் மனம் வருந்தி, அக்குதிரையைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதற்குள் துரத்தி வந்த வீரனும் வந்து சேர்ந்து, கீழே இறங்கி அவரருகில் வந்தான். அப்போது கத்தியை எடுத்துக்கொண்டு எழுந்த பிரதாபர் உடனே அதை நழுவ விட்டார். எதிர்த்து வந்தவன் கத்தி, உரையில் வைத்த

படியே இருந்தது. அவன், "அண்ணு இக் குதிரைமீது



ஏறிக்கொண்டு போங்கள்" என்று சொல்லித் தன் குதிரையைவிட்டுத் திரும்பினுன். அவன்தான் பிரதாபரின் தம்பி.

திரும்பி வந்த அவனை, மகமதிய வீரர்களும் இராஜ புத்திரர்களும் வெகுவாக விசாரித்தார்கள். அவன் ஒன்றும் சொல்லவேயில்லை. பிறகு இவ்விஷயம் எப்படியோ வெளிவந்து விட்டது. சலிம் இதைப்பற்றிக் கேட்க, அவன் "என் சகோதரருடைய கீர்த்திக்கு யாதொரு பங்கமும் நேராமல் காப்பாற்ற வேண்டிய கடமை என் தலைமீது இருந்தது" என்ற மறுமொழி மாத்திரம் சொன்னுன். பின்பு, சலிம் இளவரசர் ஒன்றும் கேட்கவேயில்லை.

பிரதாபரும் தம்மிச்சையாகத் தம் வாழுட்களைக் காட்டிலேயே கழித்தனர்.

— —

# 20. நான் ஒன்றும் செய்யவில்லையே

ஒருநாள் கோபாலன் என்ற ஒரு பையன் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயரிடம் தண்டனை அடைந்தான். அவன் வீட்டில் வந்து தன் பிதாவிடம், "நான் ஒன்றும் செய்யவில்லையே! என்னை எதற்காக உபாத்தியாயர் தண்டித்தார்?" என்று கேட்டான். பிதா நடந்த விஷயத்தை விசாரித்தார்.

அன்று பகல் கோபாலன் தன் தோழன் வேணுவுடன் பள்ளிக்கூடம் போனான். வழியில் பசுமாடு ஒன்று போய்க் கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் வேணுவுக்கு ஒரு விஷமம் செய்ய ஆசையுண்டாயிற்று. அவன் தன் கற்பலகையையும் புத்தகங்களையும் கோபாலனிடம் கொடுத்துவிட்டு அப்பசுவின் வாலைப் பிடித்து முறுக்கி விரட்டினான். அப் பசு மிரண்டு வேகமாய் ஓடியது. வேணுவும் விடாமல் வாலைப் பிடித்து விரட்டிக்கொண்டே பின் தொடர்ந்தான். ஒரு வீட்டு வாசலில் சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். மிரண்டு ஓடி வந்த பசுவைக் கண்டு அக் குழந்தைகள் அலறிக்கொண்டு அங்குமிங்கும் ஓடினார்கள். ஒரு குழந்தை ஓடும்போது கீழே விழுந்தது. கல் மீது அடிபட்டு மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. பக்கத்தில் வந்துகொண்டிருந்த ஒரு வாணியனை அந்த மாடு முட்டிற்று. அவன் தலைமீதிருந்த எண்ணெய்க் குடம் கீழே விழுந்து உடைந்தது; எண்ணெய் எல்லாம் தெருவில் கொட்டிப் போயிற்று. இவற்றை யெல்லாம் பார்த்த வேணு பசுவை விட்டுவிட்டு வேகமாகப் பள்ளிக்கூடத்திற்கு ஓடிவிட்டான்.

அன்று மாலை பள்ளிக்கூடம் கலையுமுன் வேணுவையும் கோபாலனையும் உபாத்தியாயர் தண்டித்தார்.

இவ்விஷயத்தைக் கூறி மறுபடியும், "நான் ஒன்றும் செய்யவில்லையே! அப்பா!" என்முன் கோபாலன்.

"நீயே யோசித்துப்பார்! வேணு செய்த விஷமத்தில் உனக்கும் பங்கு உண்டா இல்லையா என்பது உனக்கே தெரியும். வேணுவின் கற்பலகையையும் புத்தகங்களையும் நீ வைத்துக்கொண் டிருந்திராவிட்டால், அவன் மாட்டை விரட்டி யிருக்கமாட்டான் அல்லவா? உபாத்தியாயர் உனக்கும் தண்டனை விதித்தது மிகவும் சரி" என்று பிதா கூறி கீழ்வரும் கதையைச் சொன்னார்.

தஞ்சாவூரில், முன் ஒரு காலத்தில், நியாயாதிபதி ஒருவர் இருந்தார். அவர் முன்னிலையில், சேவகர்கள் ஓர் போர்வீரனை ஒருநாள் கொண்டுவந்தார்கள். அவனது குதிரை, கடைத்தெருவில் இரண்டு கடைகளின் சாமான்களைச் சேதமாக்கி விட்டதற்காக நியாயாதிபதி அவனுக்கு ரூபாய் 100 அபராதம் விதித்தார். அவன் "பிரபோ! நான் ஒன்றும் செய்யவில்லையே" என்று மன்றுடினன். நியாயாதிபதியோ, "நீ சவாரி செய்துவந்த உன் குதிரையை, ஜனங்கள் நடமாடும் அவ்வீதியில், அது மிரளாமலிருக்கும்படி, ஓரிடத்தில் கட்டிவிட்டு உனக்கு வேண்டிய சாமான்களை வாங்கவேண்டும். அப்படிச் செய்யாமல் குதிரையைத் தனியே விட்டுச் சென்றாய். அதுவே உன் குற்றம். அதற்காகத்தான் உனக்கு அபராதம் விதித்தோம்" என்றார்.

பிள்ளைகளே! கோபாலன் ஒன்றும் செய்யவில்லையென்று சொல்லுவது சரியா என்று யோசித்துப் பாருங்கள். நீங்களும் ஒவ்வொரு சமயம் "நாம் ஒன்றும் செய்யவில்லையே!" என்று நினைக்கக்கூடும். அச்சமயம் "நாம் என்ன செய்தோம்; வேறு என்ன செய்திருக்கலாம்" என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் பெரியவர்களான பின்பும் இவ்விதம் யோசனை செய்து, காரியங்கள் செய்துவந்தால் எப்போதும் சந்தோஷமாக இருக்கலாம்.

# 21. செய்யுட்பாடம்

## 1. விவேக சிந்தாமணி :—(10).

1. புத்திமான் பலவா னவ்வான் பலமுளான் புத்தி யற்றால்
எத்தனை விதத்தி னாலும் இடரது வந்தே தீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச் சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய உவமை யாலே.

2. செல்வம் வந்துற்ற போது தெய்வமுஞ் சிறிதும் பேணார்;
சொல்வதை அறிந்து சொல்லார் சுற்றமும் துணையும்பேணார்;
வெல்வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை விளைவும் பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்.

3. நாய்வாலை அளவெடுத்து நறுக்கித் தீட்டின்
நற்றமிழை எழுதவெழுத் தாணி யாமோ?
பேய்வாழும் சுடுகாட்டைப் பெருக்கித் தள்ளிப்
பெரியவிளக் கேற்றி வைத்தால் வீடதாமோ?
தாய்வார்த்தை கேளாத ஜகசண் டிக்கென்
சாற்றிடினும் உலுத்தகுணம் தவற மாட்டான்;
ஈவாரை ஈயவொட்டான் இவனும் ஈயான்;
எழுபிறப்பினும் கடையாம் இவன் பிறப்பே.

4. பொருளிலார்க்கின்ப மில்லை; புண்ணிய மில்லை என்றும்;
மருவிய கீர்த்தி யில்லை; மைந்தரிற் பெருமை யில்லை;
கருதிய கரும மில்லை; கதிபெற வழியு மில்லை;
பெருநிலந் தனிற்சஞ் சாரப் பிரேதமாய்த் திரிகு வாரே.

5. ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித் துண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமிர்த மாகும்;
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி யாகுந் தானே.

6. ஆசாரம் செய்வா ராகில் அறிவொடு புகழு முண்டாம்;
ஆசாரம் நன்மை யானால் அவனியிற் றேவ ராவர்;
ஆசாரம் செய்யா ராகில் அறிவொடு புகழு மற்றுப்
பேசாற்போற்பேச்சுமாகிப்பிணியொடுநரகில் வீழ்வார்.

7. கற்பகத் தருவைச் சார்ந்த காகமும் அமுதம்உண் ணும்;
விற்பன விவேக முள்ள வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வர்
இப்புவி தன்னிற் கிள்ளை இலவுகாத் ததனைப் போல
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகு மம்மா.

8. யானையைச் சலந்தனி லிழுத்த அக்*கரா
பூனையைக் கரைதனிற் பிடிக்கப் போகுமோ?
தானையுந் தலைவருந் தலம்விட் டேகினல்
சேனையுஞ் செல்வமுந் தியங்கு வார்களே.

9. தண்டா மரையி னுடன்பி றந்தும் தண்டே னுகரா மண்டேகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுஉண்ணும்;
பண்டே பழகி யிருந்தாலும் அறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்திங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே.

10. †மங்குலைப்பதி னாயிரம் யோசனை மயில்கண்டு நடமாடும்;
தங்கு‡பானுதூ ரயிரம் யோசனை தாமரை முகம்விள்ளும்;
திங்களாவதற் கிரட்டியோசனையினிற் சிறந்திடும் அரக்காம்பல்;
எங்கணாயினும் அன்பரா யிருப்பவர் இதயம்விட் டகலாரே.

## 2. திருக்குறள்:—(10)

1. அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

3. மகன்தந்தைக் காற்றும் உதவி 'இவன் தந்தை
என்னோற்றான் கொல்?' என்னும் சொல்.

4. கண்ணுடைய ரென்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

5. $தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

6. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

7. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றல் அரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

9. யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

---

* கரா—முதலை. †மங்குல்—மேகம். ‡ பானு—சூரியன்.
$தொட்டனைத்து - தோண்டுமளவு. * சோகாப்பர்—வருந்துவர்.

## 3. சித்தர் பாடல்கள் :—(8)

(a) 1. நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே!
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே!
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே!
பாடிப்பாடி நின்றுவிளை யாடு பாம்பே!

2. குற்றமற்ற சிவனுக்குக் குண்டல மானாய்;
கூறுந்திரு மாயனுக்குக் குடையு மானாய்;
கற்றைக்குழற் பார்வதிக்குக் கங்கண மானாய்;
கரவாம லுளங்களித் தாடு பாம்பே!

3. மண்டலத்தைத் தாங்குமிகு வல்லமை கொண்டாய்;
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப்பா யானாய்;
கண்டபடி நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்;
கண்ணேசெவி யாகக்கொண்டாய் ஆடு பாம்பே!

4. சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்;
சங்கரனுக் காபரணம் தானு மாயினாய்;
மந்திரத்திற் கடங்கினாய் மண்டல மிட்டாய்;
வளைந்து வளைந்து விளையாடு பாம்பே!

(b) 1. பாபஞ் செய்யாதிரு மனமே!—நாளைக்
கோபஞ் செய்தே எமன்
கொண்டோடிப் போவான்;
பாபஞ் செய்யா திருமனமே. (பாபம்)

2. சாபங் கொடுத்திட லாமோ?—விதி
தன்னைநம் மாலே தடுத்திட லாமோ?
கோபந் தொடுத்திட லாமோ?—இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ? (பாபம்)

3. சொல்லருஞ் சூதுபொய் மோசம்—செய்தால்
சுற்றத்தை முற்றுந் துடைத்திடும் நாசம்;
நல்ல பக்தி விசுவாசம்—எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாய் நேசம். (பாபம்)

4. நல்ல வழிதனை நாடு—எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு;
வல்லவர் கூட்டத்திற் கூடு—அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு. (பாபம்)

## 4. வேதநாயகம் பிள்ளை இயற்றிய சமரஸக் கீர்த்தனைகள்-(2)

### (a) இராகம்—மோகனம்—ஆதிதாளம்

பல்லவி

(a) மார்க்கம் இதுமகனே—சந்திரன்
தோற்கும் எழில்முகனே—சன் (மார்க்)

அநுபல்லவி

மூர்க்கரு டனேஉற வாடாதே—பழி
மூண்டிடும் சூதுவி ளையாடாதே—இந்தப்
*பார்க்குள்ஒரு பொய்சொல்லக் கூடாதே—மது
பானம்விரும் பிமனம் வாடாதே—சன் (மார்க்)

சரணம்

1. நித்தியன் பொன்னடி யிணையே—துயர்க்கடலை
நீந்துதற் குதவும் † புணையே;
பக்திமான்கட் குண்டோ இணையே—கடவுள்நேசம்
பரகதிக் குவழித் துணையே;
சத்திய மார்க்கத்தைப் பிரியாதே—பல
தப்பு வழியை யனு சரியாதே—சுய
புத்தியில் லாமலெங்கும் திரியாதே—இந்தப்
பூமியில் யார்க்குமிடர் புரியாதே—சன் (மார்க்)

2. புண்ணிய பாவங்கள் இரண்டே—நிச்சயம்
புண்ணிய வழியை நீ அண்டே—இந்த
மண்ணினு மேமகிமை கொண்டே—பிழைப்பதன்றி
மறுமையினும் பாக்கியம் உண்டே;
கண்ணிய மாகஎன்றும் பிரயாசி—நல்ல
கனதந்தை தாய்பெரியார்அடிபூசி—தினம்
அண்ணன் தம்பிசகோ தரிகளைநேசி—நிதம்
அன்னம் எளியவர்க் கிடுநயம்பேசி—சன் (மார்க்)

---

*பார்—பூமி. † புணை—தெப்பம்.

3. கல்வி நமக்கவ சியமே—கற்றவர்க்கிந்தக்
காசினி யெல்லாம்வ சியமே;
செல்வ முடன்வரும் க்ஷயமே—கற்றவர்க் கென்றும்
ஜீவனத்துக் கில்லை பயமே;
பலவகைப் படிப்பையும் நீங்காதே—உன்
பாடம் படிக்காமல் தூங்காதே—நீ
நல்வழி நடக்கப் பின்வாங்காதே—எந்த
நாளும் நீ கடன்வாங்கி ஏங்காதே—சன் (மார்க்)

4. சீலத் தைக்கைவிடாதே—துர்ப்போதனை
செய்ப வர்க்கிடங் கொடாதே—மாய
ஜாலத் துக்குட் படாதே—மா துஷ்டனென்று
தரணி யிற்பே ரெடாதே ;
காலத்தை விருதாவிற் கழிக்காதே—உன்
கைப்பொருள் வீணிற்செல வழிக்காதே—இந்த
ஞாலத் தொருவரையும் பழிக்காதே—வேத
நாயக னைமறந்து விழிக்காதே—சன் (மார்க்)

(b) இராகம்—நாதநாமக்கிரியை—ஆதிதாளம்

பல்லவி

நினைப்பதெப் போது நெஞ்சே—ஐயன்பதத்தை
நினைப்பதெப் போது நெஞ்சே.

அநுபல்லவி

தனத்தையும் மாதர்யௌ வனத்தையும்—உத்யோக
கனத்தையும் எண்ணிப்பல தினத்தைநாம் கழித்தால் (நினைப்)

1. நாட்டிலும் பலவிளை யாட்டிலும் துர்விஷயக்
காட்டிலும் புத்திதனை நாட்டிநாள் கழித்தால் (நினைப்)

2. காரத்தைப் பிள்ளைகள் சம்சாரத்தை எண்ணித்துர்வியா
பாரத்திலே நமது நேரத்தைக் கழித்தால் (நினைப்)

3. தரைக்குள்ஒரு சாண்குக்ஷி இரைக்காக வெள்ளைக்காரத்
துரைக்குக்கை கட்டிச்சாகும் வரைக்கும் நாம்உழைத்தால் (நினை

4. பாருக்குள் வரும்கக்ஷிக் காரர்க்கும் பின்னுமிந்த
ஊருக்கும் உழைத்துநம் வீரத்தைக் குறைத்தால் (நினைப்)

5. தொண்டைகி ழித்துக்கொண்டு சண்டைசெய்யும் வக்கீல்கள்
அண்டையி லிருந்துநம் மண்டையை உடைத்தால் (நினைப்)

6. ஞாலத்தில் பெண்கள்செய்யும் ஜாலத்தை நம்பிஅவர்
மூலத்திலே நமதுகா லத்தைக் கழித்தால் (நினைப்)

7. உழக்கில் தெற்குவடக்கு கிழக்குமேற் கென்றுசொல்லும்
வழக்கர் பெரும்சமுத்ர முழக்கத்தி லிருந்தால் (நினைப்)
8. வேத நாயகன் திருப் பாதங்களைமறந்து
பூத உடல்வளர்க்கக் காதங்கள் அலைந்தால் (நினைப்)

## 5. அருணாசல கவி இயற்றிய இராம நாடகக் கீர்த்தனைகள்:—(2)

### (i) கண்ணிகள்

1. காட்டில் இருக்கவந்து காட்டுக் கருகான
நாட்டில் இருக்கலாமோ குகனே!
*பூட்டக மோஇது குளிக்கப் போய்ச்சேறு
பூசிக்கொள்ளல் ஆகுமோ, குகனே!
2. பதினாலு வருஷம்போய் நாம்எல்லாரும் ஒருமிக்கப்
பதியில் இருக்கலாமோ, குகனே!
மதிமோசமோ? ஆனை ஏறியும் †திட்டி
வாசலால் நுழைவானேன், குகனே!
3. உன்பரிசனம் என்னது;உன் ஊரும் என்னது ; உன்
உறவும் என்உறவாச்சே, குகனே!
என்பிறகே நீவந்தால் இந்த உறவைக்காக்க
எவருண்டு சொல்வாயே, குகனே!
4. பொறுத்த எனதுதவம் முடிக்கவேணும்; அந்தப்
பொறுப்பு உனக்கில்லையோ குகனே!
குறுக்கப்பேசாதே; முதற் கோணினால் முற்றிலும்
கோணும் ; தடைசொல்லாதே, குகனே!
5. ராமன்பரதன்லக்ஷ்மணன்சத்ருக் னன்என
நால்வர் பிறந்திருந்தோம், குகனே!
ஆம்உன் உடனே ஐந்து பேரானோம் சீரானோம்;
அதிகபல வான்களானோம்; குகனே!
6. குருவியின் தலைமேலே பனங்காய் போற் புவிஆளக்
குழந்தை பரதனடா, குகனே!
அருகில் இருக்கிறாய்ய நான்இருக்கி றாப்போலே;
அடிக்கடி பார்த்துக்கொள்வாய், குகனே!

---

*பூட்டகம்—வெளிவேஷம்.
†திட்டிவாசல்—ஒருபெரிய கதவுக்குள் அமைத்த சிறு வாசல்.

7. உடன் ஆன தம்பியிவன் ; உனதும தனியிவள் ;
உனது துணைவன்நானே, குகனே !
இடர்ஏன் படுகிருய் நான்என்றும் நீயென்றும்
இரண்டாக எண்ணுதே, குகனே !
8. சற்றேகா ணுமுன்னே கங்கைக்கரை யேற்றிஎன்
தனையும் கரையேற்றினுய், குகனே !
சித்திர கூடத்துக்கு வழிஎங்கே? நீஇங்கே
திரும்பஒன்றும் பேசாதே குகனே !

ராகம்—ராதநாமக்கிரியை—ஆதிதாளம்

பல்லவி

(ii) பாய்ந்தானே ஹனுமான்—மாகேந்திரம் ஏறிப்
பாய்ந்தானே ஹனுமான்.

அனுபல்லவி

பாயந்தொரு மூவுலகேந்திர இராவணன்
மாய்ந்திட மேவுகா லாந்தகன் எனவே (பாய்ந்)

சரணம்

1. கேசவ ராகவா பூசிதனே யெனும்
வாசகம் ஆனது நேசம் விடாமல்
மோச நிசாசரர் நாசம தாய்விட
வீசிய வால்எம பாசம தாகப் (பாய்ந்)
2. விட்ட நெடுங்கடல் முட்ட உரம்கிழி
பட்டு மறைந்திடத் திட்டுகள் தெரிய
நெட்டை நெடுங்கிரி எட்டும் அணுப்பொடி
பட்டு திரும்படி நட்டணை ஆகப் (பாய்ந்)
3. எடுத்தொரு ராகவன் கொடுத்தகை மோதிரம்
இடுக்கியே காதிலே மடற்குள்ளே அடக்கி
மிடுக்குள ராக்ஷதர் நடுத்தலை மேல்விழும்
இடிக்கிணை யாகவே திடுக்கென வோடிப் (பாய்ந்)
4. அண்டர்கள் முனிவர்கள் கண்டதி சயமொடு
மண்டிய மருமலர் கொண்டவர் பொழிய
விண்டல *ரவிசசி மண்டலம் இருசிறு
குண்டலம் எனமுக மண்டலம் அசையப் (பாய்ந்)

---

* ரவி—சூரியன், சசி—சந்திரன்.

5. சுமந்திடு தாய்உரை சுமந்தவன் ஈரடி
சுமந்துவி சுவரூபம் சுமந்த தினாலே
அமிழ்ந்திய கடல்படு *திமிங்கில கிலத்தொடு
திமிங்கிலம் விசையினில் மிதந்திட மேலே (பாய்ந்)

6. அந்த மலையிலுள்ள †தந்தி கரடிபுலி
நொந்து திசைதிசைபி ரிந்தவை வெருள
முந்து கொடுமுடி பிளந்து பளபளென
உந்திணை அடிகள் உறைந்து கிளம்பிப் (பாய்ந்)

## 6. கோவலன் கதை

மதுரை தனைத்தேடி வாராளே கண்ணகியும்;
கோவலற்குக் காவல்வைத்துக் கொம்பனையாள் வாராளங்கே;
அறிவுகெட்ட பாண்டியர்கள் அரண்மனை யெங்கேஎன்று
ஆருயிரம் பாண்டியரை அருங்கிளியாள் தேடிவாராள்;
நாலுகோட்டை வாசல்களும நலமாகச் சாத்திருக்க
தெற்குநல்ல வாசலிலே தேன்மொழியாள் வந்துநின்று
"கதவைத்திற" வென்றுசொல்லிக் கன்னியவள் சத்தமிட
ஆரென்று கேட்டார்கள் அங்கிருக்கும் சேவகர்கள்.
"திருடனுட தேவிநான் தேன்மொழியாள் வந்தேனப்பா;
ராஜாக்கள் பேட்டிகாண நாயகியாள் வந்தேனப்பா;
கதவைத்திற" வென்றாளே கண்ணகி இளங்கொடியாள்.
சேவகர்கள் தாம்பார்த்துத் திடுக்கிட்டு மெய்ம்மறந்து
திறந்திருந்த பொற்கதவும் திட்டென்று மூடிக்கொண்டார்;
கண்ணகியும் தான்பார்த்துக் கடுங்கோபம் பொங்கியவள்
எட்டி யுதைத்தாளே யேந்திழையாள் பொற்கதவை;
தாண்டி யுதைக்கையிலே தவிடுபொடியானதப்போ;
பொடியாகப்போனதங்கேபொற்கொடியாள் தன்னுதையால்.
அப்போதே உள்நுழைந்தா ளரிவையந்தக் கண்ணகியும்.
அதிலே யொருவனையும் அருங்கிளியாள் தான்பிடித்து
'முன்பின்னாய்த் திருப்பிவிட்டு, 'மூதேவி கேள்,' என்றாள்.
'திருடனுட தேவிநான் தேன்மொழியாள் வந்தேனென்று
என்னை வந்து காணச்சொல்லு இரண்டுங்கெட்டராசர்களை."

---

* திமிங்கிலம், திமிங்கிலகிலம் - இவை ஒன்றிற்கொன்று பெரிய நீர்ப்பிராணிகள்; † தந்தி— யானை.

# 22. வசன பாகங்கள்

## (பிள்ளைகள் ஒப்புவிக்க உபயோகமாகும்)

### *(1) கல்வியின் பெருமை

1. கல்வியின் பெருமை சொல்லுக் கடங்காததாக இருக்கிறது; அந்தகாரத்திற்கும் பிரகாசத்திற்கும் எவ்வளவு பேதமோ, அவ்வளவு பேதம் செல்வப்பொருளுக்கும் கல்விப் பொருளுக்கும் இருக்கிறது. செல்வம் புத்தியைக் கெடுக்கும், கல்வி புத்தியைக் கொடுக்கும். செல்வம் கொடுக்கக் குறையும்; கல்வி கொடுக்க நிறையும். செல்வம் சிலநாளில் நாஸ்தியாம்; கல்வி அழியாத ஆஸ்தியாம். செல்வம் திருடர்களால் அபகரிக்கப்படும்; கல்வி யாவராலும் உபசரிக்கப்படும். செல்வம் நம்மைத் துஷ்டர் கையில் ஒப்புவிக்கும்; கல்வி நம்மை ஆபத்திலிருந்து தப்புவிக்கும். செல்வம் காமாதிகளை உண்டாக்கும்; கல்வி காமாதிகளை நாசமாக்கும். செல்வர்களுடைய பேர் ஜகத்தில் அப்பிரசித்தம்; கல்விமான்களுடைய பேர் ஜகப்பிரசித்தம். கல்வியே தனம்; கல்வியே கனம்; அழகில்லார்க்குக் கல்வியே அழகு; ஆபரணமில்லார்க்குக் கல்வியே பூஷணம்; பலமில்லார்க்குக் கல்வியே பலம்; துக்கமுள்ளவர்க்குக் கல்வியே சுகம்; தரித்திரர்களுக்குக் கல்வியே பாக்கியம். ஆபத்து வேளையில் கல்வியே கவசம். கல்வி நினைத்ததெலாம் தரும் சிந்தாமணி.

### †(2) விசுவாமித்திரர் இராமனை அனுப்பும்படி தசரதரை வேண்டல்

தசரதர் :—முனிபுங்கவ! இதுவரையில் நான் சொல் தவறி யறியேன். இராமன் சிறுவன்; இன்னும் நித்திரையில்

---

* தேவநாயகம் பிள்ளையவர்கள் இயற்றியது.

† திவான் பஹதூர் ஸ்ரீமான் பவானந்தம் பிள்ளையவர்கள் M.R.A.S., F.R.H.S., இயற்றிய இலக்கியத்திரட்டு.

தாயை நினைத்தழுகிறவன்; உலகியல் இன்னதென்றுணராதவன்.

விசுவாமித்திரர்:—உன் மகன் இராமனா உலகியல்பு உணராதவன்? உனக்குத்தான் அவன் இயல்பு தெரியாது; எனக்குமா தெரியாது? எத்தனையோ தேவர்கள் நான் அழையாமலே எனக்குப் பரிந்து வரக் காத்திருக்கிறார்கள். அங்ஙனமிருந்தும் நான் இராமனை நாடுவானேன்? நன்றாய் யோசி; அவன் இன்னானென்று அறியாமல் என்னென்னவோ கூறுகிறாயே.

வசிஷ்டர்:—சக்கரவர்த்தி! மழையிலுண்டான வெள்ளம் ஆறாகச்சென்று சமுத்திரத்திற் பாய்வதுபோல், உமது புத்திரனுக்கு அளவற்ற வித்தைகள் தாமே வலிய வந்து சித்திக்கும் காலம் சமீபித்திருக்க, அதை நீர் உணராமல் மறுக்கின்றீரே. தருமதேவதை போல் விளங்கும் நீர், ஒரு மகானுக்கு ஒன்றைச் சொல்லிப் பிறகு அதற்கு மாறாக நடப்பது தகுமா? இன்னபடி நடக்கின்றேன் என்று வாக்குக் கொடுத்தால், அதற்கேற்றபடி நடப்பதன்றோ நல்லவர் கடன். போர் முகங் கண்டறியாதவன் என்றாலும், இராமச்சந்திரன் விசுவாமித்திரருடைய பாதுகாவலில் இருக்கிறவரையில், அவனை ஒருவராலும் ஒன்றும் செய்யமுடியாது. அரக்கர்களை ஒழிப்பதென்றால் விசுவாமித்திரருக்கு அது ஒரு பெரிய காரியமன்றென்பது உமக்கு நிச்சயமாய்த் தெரிந்திருக்கட்டும். அவர் இப்போது உம்மிடம் இராமச்சந்திரனை வேண்டுவது அவனுடைய நன்மைக்கேயல்லது வேறன்று. ஆகையால், இராமன் அவருடன் புறப்படுவதைப்பற்றி உமக்குக் கொஞ்சமும் அச்சமே வேண்டாம்.

## (3) கிருஷ்ணன் தூது

பீமன் தர்மபுத்திரர் வார்த்தையாற் கோபத்தீ மூண்டு எழுந்து, "அண்ணா! இதற்கு என்ன செய்வேன்? பட்டவர்த்தனரும், மகுடவர்த்தனரும், மண்டலீகருங் கூடி யிருந்த சபையில் பாஞ்சாலியை மானபங்கம் செய்த போது சினந்து எழுந்த எங்களைப் பொறுங்களென்று அடக்கினீர்; வனவாசம் என்று சொல்லும் முன்னமே வனம்போய்ச் சேர்ந்தீர்; பதின்மூன்று வருஷம் எவரும் படாத பாடுபட்டு வந்தும் † பொருது வெல்லாமல் உலூகனைத் தூதனுப்பினீர்; துரியோதனன் நகைத்து உலூகனைத் துரத்திய பின்பும் கிருஷ்ணனைத் தூதனுப்ப விரும்புகிறீர். அப்படியின்றி என்னைத் தூதனுப்பினால், நான் துரியோதனனைச் சொர்க்கம் ஆள அனுப்பி விடுகிறேன்" என்று கூறி, ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி, "எங்கள் அண்ணனார் நாங்கள் ‡ வேத்தவையில் $ வஞ்சினம் உரைத்தவாறு பகையை முடித்தார்; பாஞ்சாலி கூந்தலையும் முடிப்பித்தார்; இன்னும் யாதுதான் செய்யார்? எங்களையும் சீக்கிரம் முடிப்பார். இவருடன் பிறந்து நாங்கள் பெற்ற கீர்த்தி போதும், போதும்" என்று கூறினான்.

தருமபுத்திரர்.—"வீமா! முனியாதே, நம்மை இகழ்ந்தவனும் வனத்திற்கு விடுத்தவனும் நமது சகோதரன்றானே. கைவிரல் கண்ணிலே பட்டால் கையை என்ன பண்ணலாம்" என்று கூறினர்.

---

* மாக்மில்லன் கம்பெனியார் எட்டாம் வாசக புத்தகம்.

† பொருது—போர் செய்து.

‡ வேத்தவை—ராஜசபை. $ வஞ்சினம்—சபதம்.

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.

# சித்திர முறை இலக்கணம்

BY

P. R. ராஜசூடாமணி

இவ்வாசிரியர் இவ்விலக்கண நூற்களில் எல்லா விஷயங்களையும் சித்திரங்களின் மூலமாய்க் கற்பிக்கிறார். மாணவர்கள் படிப்படியாக ஒவ்வொரு இலக்கண விதியையும் படங்களின் மூலமாகக் கிரகித்துப் பின் தாம் கிரகித்த விதிகளை வியாசம் எழுதுவதற்கு உபயோகிக்கவும் தெரிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்றன.

| | | |
|---|---|---|
| முதல் புத்தகம், 4-ம் வகுப்புக்கு | அணு | 3 |
| இரண்டாம் புத்தகம், 5-ம் வகுப்புக்கு | ,, | 5 |

---

# பால நீதிமஞ்சரி

வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியார் எழுதியது

| | | |
|---|---|---|
| மலர் 1.—உலகநீதிக் கதைகள், 2-ம் வகுப்புக்கு | அணு | 2½ |
| மலர் 2.—ஆத்திசூடிக் கதைகள், 3-ம் வகுப்புக்கு | ,, | 3 |
| மலர் 3.—கொன்றைவேந்தன் கதைகள், 4-ம் வகுப்புக்கு | ,, | 4 |

---

# பாலர் சுகநூல்

(சித்திரப் படங்கள் அடங்கியவை)

விலை அணு 4

---

# இந்தியர் சரித்திரம்

சென்னை வித்தியா இலாகா அதிகாரிகள் தயாரித்த பாட திட்டத்தை யொட்டி திருத்தி எழுதிய பதிப்பு

| | | |
|---|---|---|
| ஐந்தாம் வகுப்புக்குரியது | அணு | 5 |
| முதல் பாரத்துக்குரியது | ,, | 7 |
| இரண்டாம் பாரத்துக்குரியது | ,, | 10 |
| மூன்றும் பாரத்துக்குரியது | ,, | 10 |

## கோகலே தமிழ் வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| கோகலே தமிழ் வாசகம் | I—1-ம் | வகுப்பிற்கு | 0-2-0 |
| ஷை | II—2-ம் | ,, | 0-3-0 |
| ஷை | III—3-ம் | ,, | 0-4-0 |
| ஷை | IV—4-ம் | ,, | 0-5-0 |
| ஷை | V—5-ம் | ,, | 0-6-0 |
| ஷை | VI—6-ம் | ,, | 0-7-0 |
| ஷை | VII—7-ம் | ,, | 0-8-0 |
| ஷை | VIII—8-ம் | ,, | 0-9-0 |

**கோகலே 6, 7, 8-ம் வாசகங்களுக்குத்**

**துணைப்புத்தகங்கள் முறையே விலை அணா 4, 5, 6.**

---

## பாலர் தமிழ் வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| பால சிக்ஷை | I—1-ம் | வகுப்பிற்கு | 0-2-0 |
| பாலர் தமிழ் வாசகம் | II—2-ம் | ,, | 0 3-0 |
| ஷை | III—3-ம் | ,, | 0-4 0 |
| ஷை | IV—4-ம் | ,, | 0-5 0 |
| ஷை | V—5-ம் | ,, | 0-6-0 |

## செய்யுள் மலர்

| | | |
|---|---|---|
| உலகநீதி | மூலமும், உரையும் | 0-0-9 |
| ஆத்திசூடி | ,, | 0-1-3 |
| கொன்றைவேந்தன் | ,, | 0-1-0 |
| வெற்றிவேற்கை | ,, | 0-1-3 |
| வாக்குண்டாம் | ,, | 0-1-6 |